# மத்தேயு 2:1-12

வசனங்களின்

# வியாக்கியானம்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்

பேசிய செய்திகளிலிருந்து

# மத்தேயு 2:1-12

1. ஏரோது ராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்தபொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து,

2. யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம் என்றார்கள்.

3. ஏரோதுராஜா அதைக் கேட்டபொழுது, அவனும் அவனோடுகூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள்.

4. அவன் பிரதான ஆசாரியர் ஜனத்தின் வேதபாரகர் எல்லாரையும் கூடிவரச்செய்து: கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்தான்.

5. அதற்கு அவர்கள்: யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார்; அதேனென்றால்:

6. யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார் என்று, தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்கிறது என்றார்கள்.

7. அப்பொழுது ஏரோது, சாஸ்திரிகளை இரகசியமாய் அழைத்து, நட்சத்திரம் காணப்பட்ட காலத்தைக்குறித்து அவர்களிடத்தில் திட்டமாய் விசாரித்து:

8. நீங்கள் போய், பிள்ளையைக்குறித்துத் திட்டமாய் விசாரியுங்கள்; நீங்கள் அதைக் கண்டபின்பு, நானும் வந்து அதைப் பணிந்துகொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள் என்று சொல்லி, அவர்களைப் பெத்லகேமுக்கு அனுப்பினான்.

9. ராஜா சொன்னதை அவர்கள் கேட்டுப் போகையில், இதோ, அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்குமேல் வந்து நிற்கும்வரைக்கும் அவர்களுக்குமுன் சென்றது.

10. அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்ட போது, மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்.

11. அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்.

12. பின்பு, அவர்கள் ஏரோதினிடத்திற்குத் திரும்பிப் போகவேண்டாம் என்று சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு, வேறு வழியாய்த் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப்போனார்கள்.

*இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:*

# செய்தி: எதிர்பார்ப்புகள்

Phoenix, Arizona, USA
54-02-28A

72. இயேசு பிறந்திருந்த நேரத்தில், இந்த பகல் பொழுது போன்ற அன்றொரு நாளில் மக்கள் தேவனை விட்டு அலைந்து திரிந்து கொண்டிருந்தவர்களாய் இருந்தார்கள். அந்நாட்களில் இப்பொழுது நமக்கு இருப்பது போல் ரேடியோ, தந்தி, தொலைக்காட்சி மூலமாக செய்திகளை அனுப்பக் கூடிய அநேக வழிகள் இல்லை. அப்பொழுது அவர்களுக்கு இருந்த ஒரே வழி, வாய்மொழி மூலமாக கூறப்பட்டு, காதால் கேட்கக் கூடியதாய் இருந்தது. வேகமாக; இப்பொழுது நாம் அவருக்கு செவி கொடுப்போம்.

இயேசு யூதேயாவிலிருக்கும் பெத்லகெமில் பிறந்தார் என்று வேதாகமத்தில் நமக்கு போதிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில் ஞானிகள் கிழக்கிலிருக்கும் போது ஒரு நட்சத்திரத்தை கண்டு அதை பாலஸ்தீனா வரைக்கும் பின்தொடர்ந்து

வந்தார்கள். அது சரிதானே? ஆம், அந்நாட்களில் அவர்கள் நட்சத்திரத்தை வைத்து காலத்தை கணக்கிட்டார்கள்.

ஒவ்வொரு பட்டணமும் அதினுடைய உயரமான பாகத்தில் வானிலை ஆய்வுக் கூடத்தை நிறுவியிருப்பார்கள். அவர்கள் அங்கே ஜாமக்காரரை (watchman) வைத்திருப்பார்கள், அவர்களும் அவர்களுக்கு நட்சத்திரத்தை கொண்டு நேரத்தை அறிவிப்பார்கள். பகல் நேரத்தில், சூரிய கடிகாரத்தைக் (sundial) கொண்டு நேரத்தை அறிவிப்பார்கள். உங்களுக்குத் தெரியுமா, அவர்கள், “கோபுரத்தில் இருக்கும் ஜாமக்காரனைப் பார்த்து, இப்பொழுது நேரம் என்ன”, என்று கேட்டு, அவ்விதமாக அவர்கள் நேரத்தை அறிந்துக் கொள்வார்கள். எனவே, அவர்கள் இவ்விதமாக நேரத்தை அறிந்துகொண்டார்கள்.

73. நீங்கள் இதை பிடித்துக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அந்த நட்சத்திரம் அங்கிருக்கும் ஒவ்வொரு பட்டணத்தையும் கடந்து வந்தது, இருப்பினும் ஒருவரும் அதைப் பார்க்கவில்லை. ஆனால் அது அவ்விதமாக கடந்து வந்ததை நம்முடைய

வேதாகமம் உறுதிப்படுத்துகிறது. அது அவ்விதம் நடந்தது என்பதை நானும் விசுவாசிக்கிறேன். “நாங்கள் அவருடைய நட்சத்திரத்தை கிழக்கிலே கண்டு அவரைத் தொழுது கொள்ள வந்தோம்”. அது சரிதானே? அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு, இந்த நட்சத்திரத்தினால் வழிநடத்தப்பட்டார்கள்.

நட்சத்திரங்களிலேயே பெரிதான இந்த நட்சத்திரம், எல்லாவற்றிலும் பெரிதானது, விஞ்ஞான ரீதியாக உலகத்தில் கடந்து சென்றது. இருப்பினும் அவர்கள் அதைக் காண முடியாமலிருந்தார்கள். ஆனால் “யாக்கோபில் ஓர் நட்சத்திரம் உதிக்கும்” என்ற பிலேயாமின் தீர்க்கதரிசனத்தை கேள்விபட்ட சில ஞானமுள்ள புருஷர்கள் இருந்தார்கள். அதை அவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். அதை அவர்கள் எதிர் நோக்கி இருந்தார்கள். எனவே அதை அவர்கள் கண்டு பிடித்தார்கள். பின்னர் அதை அவர்கள் பின்பற்றிச் சென்றார்கள். ஏனெனில் அதை அவர்கள் எதிர் நோக்கியிருந்தார்கள்.

நான் ஒரு காரியத்தை எதிர் நோக்கியிருக்கிறேன். நீங்களும் எதிர்பார்க்கவில்லையா? கர்த்தராகிய இயேசுவின்

வருகைக்கு சற்று முன்னதாக என் ஆத்துமா மிகவும் உன்னத நிலைக்கு ஊக்கமடைந்திருக்கிறது. ஏனெனில் தேவன் இதைவிட்டு கடந்து போவதற்கு முன்னதாக புறஜாதி உலகம் அசைக்கப்படும்படிக்கு ஏதோ காரியம் நிகழப்போவதை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆம். அதை நான் ஃபீனிக்ஸில் எதிர் பார்க்கிறேன். அதை நான் எதிர் நோக்கியிருக்கிறேன். நீங்கள் என்னோடு கூட உடன்பட்டு, நீங்களும் அதை எதிர்பார்க்க நான் விரும்புகிறேன்.

74. இந்த ஞானிகள், அவர்கள், "என்றோ ஒரு நாள் என் தகப்பனார் கூறினார்... இங்கே அது வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறபடி 'யாக்கோபில் ஓர் நட்சத்திரம் உதிக்கும்' என்று அவருடைய தகப்பனாரும், அவருக்கு தகப்பனாரும் கூறினார்கள்", என்றார்கள். அது தோன்றினபோது அதை அவர்கள் பார்த்தார்கள். அவர்கள் அதை எதிர்நோக்கியிருந்தபடியால், அதை அவர்கள் பார்த்தார்கள். மற்றவர்களோ அதைப் பார்க்கவில்லை.

யாரோ ஒருவர் என்னிடத்தில், "அழுதுகொண்டும், கூச்சலிட்டு கொண்டும்

இருக்கும் அந்த மக்களெல்லாரும் உணர்ச்சிவசப்பட்டவர்களும், தங்களை அதிகமாக கிறிஸ்தவர்களைப் போல் காண்பிக்கிறவர்கள் என்று நீங்கள் நினைக்கவில்லையா?" என்றார். இல்லை ஐயா. இல்லை ஐயா. அவர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல. "சகோதரன். பிரான்ஹாம், அது மனஉளவியல் சம்பந்தப்பட்ட பேசுதல் என்று நீங்கள் நினைக்கவில்லையா?" இல்லை ஐயா. அப்படி அதை நான் நினைக்கவில்லை. அவர்கள் ஒரு காரியத்தை எதிர்பார்த்திருந்தார்கள். அது ஆத்துமாவை போஷிக்கும்படிக்கு பரலோகத்திலிருந்து வரும் மன்னாவை அவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். எதிர்பார்ப்புடன் அங்கே அவர்கள் காத்திருக்கும்போது, பரத்திலிருந்து மன்னாவை கொடுக்கும்படிக்கு தேவன் அவர்களுக்கு கடமைப்பட்டிருக்கிறார், ஏனென்றால் அவர்கள் அதை எதிர்பார்த்துக் கொண்ருக்கிறார்கள்.

நீங்களும் ஒரு கூட்டத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறபடியால், அதை உங்களுக்குக் கொடுக்கும்படி தேவன் கடமைப்பட்டிருக்கிறார்.

★★★★★

# செய்தி: ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது

The Deep Calleth To The Deep
54-06-24

34. இப்பொழுது, அநேக நேரங்களில்... நல்லது, இந்த விளக்குகளை கண்காணிக்கிறவர்கள் யாராது இருக்கிறார்களா? அவைகளை நகர்த்தக் கூடியவர் யாராவது ஒருவர் அங்கே இருக்கிறாரா?) இப்பொழுது சில நேரங்களில், பரிசுத்த ஆவியானவர் வரும்போது ... உங்களில் அநேகர் அந்த படத்தைப்பார்த்திருக்கிறீர்கள். நான் மீண்டும் எப்பொழுதாவது இங்கு வரும்போது, அவைகளில் சிலவற்றை உங்களுக்குக் கொண்டு வருகிறேன், இன்றிரவு, சகோதரன் மூர் சொன்னபடியாக, அநேக நேரங்களில் அது, புகைப்படமாக எடுக்கப்பட்டிருக்கிறது. புத்தகங்களில் இருக்கிற அந்த புகைப் படத்தை, நீங்கள் யாவரும் பெற்றிருக்கி றீர்கள், என்று நான் நினைக்கிறேன். இரண்டு புகைப்பட பெட்டிகளை மாத்திரமே, நான் கொண்டிருந்தேன். ஆகவே, நீங்கள், அவைகளில் உண்மையாகவே களிகூர்ந்தீர்கள் என்று நம்புகிறேன்.

35. இப்பொழுது, நீங்கள், அதை உற்று நோக்கும்போது, அதற்குள் மறைந்திருக்கிற இன்னொரு படத்தை பார்க்கலாம். அதை, பத்திரிகை புகைப்பட கலைஞர் ஒருவர், அர்க்கான்சாசில் உள்ள கேம்டனில், படம் பிடித்தார். ஆனால், முதலில் அது, அமெரிக்க சங்கத்தினால் வழங்கப்பட்ட அதிகாரபூர்வ படமாக இல்லை. அவர்கள், அதை எடுத்து வைத்திருந்தார்கள். பிறகு அது, அதிகார பூர்வமாக்கப்பட்டது.

ஆகவே, அநேக ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில்... சில காலத்திற்கு முன்பாக, ஒரு எழுப்புதலுக்கு பிறகு, நான் அங்கே ஆற்றில் நின்றுக்கொண்டு, சுமார் ஐநூறு பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்துகொண்டிருந்தேன். அப்பொழுது, சரியாக, நான் நின்று கொண்டிருந்த அந்த இடத்திற்கு நேராக, அந்த வெளிச்சம் வந்தது. ஜனங்கள் மயங்கி விழுந்தார்கள். ஆனால், அது அப்படியே அங்கே இருந்தது. மேலும், அது கெர்ச்சிக்கிற சத்தமாயும் வீசுகிற அக்கினியாயும் இருந்தது. எனக்கு தேவனிடத்திலிருந்து தயவு கிடைக்கும் பட்சத்தில், இந்த தலை நகரத்தில், இன்றிரவு, இங்கே கூடியுள்ள இந்த ஜனங்களுக்கு முன்பாக, அதே விதமாக, இன்னும் ஒரு விசை

தேவன் காட்சியில் வரவேண்டும், என்று ஜெபிக்கிறேன்.

இப்பொழுது, அது, சிலருடைய கண்களுக்கு காணப்படலாம், சில கண்களுக்கு காணப்படாமல் இருக்கலாம், என்பதை நீங்கள் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். அவ்விதமாக, நிகழவேண்டும் என்று நாம் விரும்புவதில்லை, ஆனால்,அது, அவ்விதமாகதான் நிகழ்கிறது. தேவ ஆவியானவர், இயேசுவின் மேல் வந்து, அமர்ந்த காட்சியை யோவான் மட்டுமே பார்த்தவனாய் இருந்தான். அது சரிதானே? கூடி இருந்த ஜனங்கள் கண்டார்கள், என்று ஒருபோதும் சொல்லப்படவில்லை. மேலும், ஞானிகள் நட்சத்திரத்தை பின்பற்றினார்கள். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? அந்த நட்சத்திரம் தேசத்திலுள்ள எல்லாவான ஆராய்ச்சி கூடங்கள் மேலும் தான் கடந்துசென்றது. மேலும், கிழக்கத்திய தேசத்திலிருந்து வாரங்கள், மாதங்களாக, கடந்து வந்து கொண்டேயிருந்தது. அவர்கள், நேரத்தை நட்சத்திரங்களை கொண்டுதான் கணக்கிட்டார்கள். அவர்கள் இரவெல்லாம் ஆராய்ச்சி செய்து கொண்டு நேரத்தை கணக்கிட்டு கொண்டிருந்தார்கள். ஆனால், அதை ஒருவரும் பார்க்கவில்லை. ஆனால், ஞானிகள் மட்டும் அதை கண்டார்கள். ஏனென்றால், அவர்கள் அதை

எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள். நீங்கள் இன்றிரவு, கிறிஸ்துவை எதிர்நோக்கி கொண்டிருந்தால், நீங்கள், அவரை காண்பீர்கள். கர்த்தராகிய இயேசு தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக, நல்லது.

★★★★★

## செய்தி: எபிரெயர், முதலாம் அதிகாரம், 57-08-21

39 ஒரு நாள் மதிய வேளையில் பவுல் தன்னுடையப் பாதையில் தமஸ்குவிற்கு சென்று கொண்டிருந்தபோது, ஒரு பெரிய பிரகாசமான வெளிச்சம் அவனைத் தாக்கி கீழே தரையிலே விழத் தள்ளிற்று. பவுலைத் தவிர வேறுயாரும் அதைக் காணவில்லை. நீங்கள் அதைக் கவனிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இப்பொழுது இங்கே இது தனிப்பட்டதல்ல, ஆனால் நாம் இந்தப் பின்னணிக்குள்ளாக முன்னோக்கி சென்று கொண்டிருக்கிறோம். எனவே அது அதே மாறாத இயேசு என்பதை..நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

40 இப்பொழுது, அவர் இங்கே பூமியின் மேலிருந்தபோது, “நான் தேவனிடத்திலிருந்து வந்தேன். நான் மீண்டும் தேவனிடத்திற்குப் போகிறேன்” என்றார்.

41 இப்பொழுது, அவர் இஸ்ரவேல் புத்திரரை வழி நடத்தின்போது, அவர் அக்கினி ஸ்தம்பமாய் இருந்தார். அவர் மாம்சமானார். அதன்பின்னர் அவர் மீண்டும் அதே அக்கினி ஸ்தம்பத்திற்கு திரும்பிச் சென்றார். அவர் பவுலை தமஸ்குவிற்குப் போகும் வழியில் சந்தித்தபோது, அவர் அந்த அக்கினி ஸ்தம்பமாய், அந்த ஒளியாய், பாருங்கள், ஒரு மகத்தான ஒளியாய் இருந்தார். பவுல், “நான் துன்பப்படுத்துகிறதாக கூறுகிற நீர் யார்?” என்று கேட்டான்.

42 அதற்கு அவரோ, “நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே, அந்த ஒளியே” என்றார். ஓ, அவர் அற்புதமானவரல்லவா? [சபையோர், “ஆம்” என்கின்றனர்-ஆசி.]

43 அவர் இன்றிரவு இங்கே நம்மோடு இருக்கிறார். அவருடையப் புகைப்படம் அங்கே எடுக்கப்பட்டது, அதேக் காரியம், பாருங்கள், அக்கினி ஸ்தம்பம், ஒளி, அவர் இருந்தவிதமாகவே

இன்றைக்கும் “நேற்றும் இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார்”.

44 அவனோடிருந்த மனுஷரோ அந்த ஒளியைக் காணவில்லை, ஆனால் அது அதே விதமாக அங்கே இருந்தது. அதேப் பலன்களைத் தருகிறது.

45 இப்பொழுது யாரேனும் இந்தக் கட்டிடத்தில் கிறிஸ்துவை காண முடியுமா? எவருமே அவரைக் காண முடியாதே? நிச்சயமாக, அதுதான் அங்கே சம்பவித்தது.

46 ஓர் இரவு பேதுரு சிறைச்சாலையிலிருந்தபோதுகூட அதுவே சம்பவித்திருந்தது. அந்த ஒளி சிறைச்சாலைக்குள் வந்து, பேதுருவைத் தொட்டு எழுப்பி, உட்புற காவலர் பக்கத்தில் நடக்கச் செய்து, வெளிப்புற காவலர் அருகே நடக்கச் செய்து, வாசலண்டை நடக்கச் செய்து, பிரதான வாசலையும், நகர வாசலையும் கடந்து போகும்படிக்குச் செய்தது. பேதுருவோ, “நான் சொப்பனங்கண்டு கொண்டிருக்க வேண்டும்” என்றான். ஆனால் அவன் சுற்றும் முற்றும் பார்த்தபோது, அந்த ஒளியானது போய்விட்டிருந்தது; கிறிஸ்துவே, அந்த நித்திய ஒளி, அதோ அவர் இருக்கிறார். இப்பொழுது வீதியிலே …

47 கவனியுங்கள், நாம் இதைக் குறித்துப் பேசுகிறபடியால், மற்றொரு காரியம் அப்படியே என் சிந்தைக்கு வந்துள்ளது. ஆனால் கிழக்கத்திய தேசமான இந்தியாவிலிருந்து வந்த வானசாஸ்திரிகள் மாதங்களாக பள்ளத்தாக்குகளினூடாகவும், வனாந்திரங்களினூடாகவும் கடந்து அந்த நட்சத்திரத்தைப் பின்தொடர்ந்து வந்தனர். அந்த நட்சத்திரமோ (எல்லா வானிலை ஆய்வுக் கூடங்களையும் கடந்து சென்றது; அந்த நாட்களில் அவர்கள் நட்சத்திரங்களைக் கொண்ட இரவு நேரத்தை கணக்கிட்டனர்) ஆயினும் எந்த சரித்திரகாரனுமே அல்லது வேறு யாருமே இந்த வான சாஸ்திரிகளைத் தவிர அந்த நட்சத்திரத்தை ஒருபோதும் குறிப்பிட்டுக் கூறினதேயில்லை. அவர்கள் அதைக் காணும்படிக்கே அது சுட்டிக் காட்டப்பட்டதாயிருந்தது.

48 ஆகையால் நீங்கள் காண்கிற காரியங்களை மற்ற நபர் காணாமலிருக்கலாம். உங்களுக்கோ அது ஓர் உண்மையாயிருக்கிறது.

அவர்கள் அதைப் புரிந்து கொள்ளுகிறதில்லை. ஒரு மனமாற்றதைப் போன்றே, நீங்கள் மனமாற்றமடைந்து, தேவனுடைய ஆசீர்வாதங்களை அனுபவித்து

மகிழ்ந்து, தேவனுடைய ஆசீர்வாதங்களை அப்படியே பருக முடியும். உங்களுக்கு அடுத்துள்ள நபரோ, "நான் ஒரு காரியத்தையும் காணவில்லையே" என்று கூறுவான். பார்த்தீர்களா? புரிகிறதா? அதுதான் அது. அதாவது, "நான் அதைப் புரிந்து கொள்ளவில்லை. அது எதைக் குறித்தது என்றே நான் புரிந்துகொள்ளவில்லை" என்பான். நல்லது, அவன் அதை சற்றேனும் புரிந்து கொள்ளவில்லை. அவ்வளவுதான். அங்குதான் உங்களுடைய காரியமே உள்ளது.

★★★★★

## செய்தி: எபிரெயர், மூன்றாம் அதிகாரம், 57-09-01M

135 இஸ்ரவேலர்கள் தங்களுடைய அவிசுவாசத்தினால் தேவனுக்கு கோபமூட்டினார்கள் என்பதை எத்தனைபேர் அறிவீர்கள்? [சபையோர், "ஆமென்" என்கின்றனர். ஆசி.] அவர்கள் முற்றிலுமாய் முறுமுறுத்தனர். தேவன் அங்கே நடந்து சென்றார். அவர்கள் முறுமுறுத்தபோது... முதல் காரியம், அவர்கள் தொல்லைக்குள்ளானார்கள்.

இதோ இந்த அக்கினி ஸ்தம்பம் அவர்களுக்கு மேலே இருந்தது. அவர்கள் எல்லோரும் அதை கண்டார்களா அல்லது இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் எப்படியிருந்தாலும் மோசே அதைக் கண்டான். அது அவர்களுக்கு மேலே இருந்தது. அவர்கள் அதை கவனித்தனர். அவர்கள் வந்தபோது... அவர்கள் அதைக் காணவில்லையா என்றால், அவர்கள் அதைக் கண்டார்களா அல்லது இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை. அது அவர்களுக்கு முன்பாகச் சென்றது. அது அங்கே இருந்தது என்று வேதம் கூறியுள்ளது.

136 வேதம், “வானசாஸ்திரிகளுக்கு முன்பாக நட்சத்திரம் சென்றது” என்று கூறியுள்ளது. வானசாஸ்திரிகளைத் தவிர வேறு யாரும் அதைக் காணவில்லை. அது ஒவ்வொரு வானிலை ஆய்வுக் கூடத்தையும் கடந்து சென்றது. அவர்கள் அப்பொழுது நட்சத்திரங்களைக் கொண்டே நேரத்தைக் கணக்கிட்டனர். ஆனாலும் வான சாஸ்திரிகளைத் தவிர வேறு எவருமே அதைக் காணவில்லை. அந்த நட்சத்திரம் அவர்கள் காண்பதற்காகவே இருந்தது. அந்த நட்சத்திரம் வான சாஸ்திரிகளுக்காகவே அனுப்பப்பட்டிருந்தது.

137 அக்கினி ஸ்தம்பம் மோசேக்கு அனுப்பப்பட்டது, மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பப்பட்டான். அவர்கள் மோசேயைப் பின்பற்ற வேண்டியவர்களாயிருந்தனர். அவர்களால் மோசேயைக் காண முடிந்தது. மோசே அந்த ஒளியைக் கண்டான்.

அவர்கள் அங்கு புறப்பட்டுச் சென்றனரே!....? அவர்கள் வெளியே புறப்பட்டுச் சென்றபோது, அவர்கள் சிவந்த சமுத்திரத்தண்டை வந்தனர். ஓ, அவர்கள் அவர்கள் பழைய எகிப்து தேசத்தில் இருந்தபோது, அந்த எல்லா அற்புத அடையாளங்களையும், சம்பவித்த காரியங்களையும் ஒருபோதும் கண்டதேயில்லை. ஆனால் அவர்கள் தங்களுடைய பயணத்தில் வெளியே புறப்பட்டபோது, மனமாற்றமடைந்து வெளியே கொண்டுவரப்பட்டனர். அதன்பின்னர் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய முதல் காரியம் என்னவெனில் அவர்கள் தொல்லைக்குள்ளானார்கள்.

138 தேவன் உங்களை தொல்லைக்குள் கொண்டுவர விரும்புகிறார். அவர் உங்களுக்கு தொல்லையை வைத்து, நீங்கள் அதைக் குறித்து

என்ன செய்வீர்கள் என்று காணவே விரும்புகிறார். ஆகையால் அவர் சிவந்த சமுத்திரத்தண்டை நிறுத்தினார். முதலாவது காரியம் உங்களுக்குத் தெரியுமா? அவர்களை இந்த இடம் வரைக்கும் பவனி வரச் செய்து, அதன்பின்னர் அவர்களுக்குப் பின்னர் பார்வோனை அனுப்பினார். தேவன் எப்படி அதைச் செய்ய விரும்புகிறார் என்று பார்த்தீர்களா? அவர் தம்முடைய வல்லமையையும், அன்பையும் காண்பிக்க விரும்புகிறார். அவர் தேவனாயிருக்கிறார். அவர் யாராயிருக்கிறார் என்பதை உங்களுக்கு காண்பிக்க அவர் விரும்புகிறார். ஆமென்.

இன்றைக்கு அதைக் குறித்த தொல்லை என்னவெனில், ஜனங்கள், “ஓ, அந்த நாட்கள் கடந்துவிட்டன” என்று கூறுகின்றனர். இல்லையே. நீங்கள் அதைப் போன்ற காரியத்தினால் கற்பிக்கப்பட்டிருக்கும்போது, எப்படி தேவன் தம்மை காண்பிக்க முடியும்? ஆனால் தேவன் தம்மை வெளிப்படுத்த விரும்புகிறார்.

★★★★★

# செய்தி: **யூதருடைய ராஜாவானவர் எங்கே?,** 58-12-21

66. இப்பொழுது இப்பொழுது நாம் பேசிக்கொண்டிருக்கிற இந்த வான சாஸ்திரிகள்....... அழைக்கப்பட்டனர்....... அவர்கள் உண்மையாகவே அறிஞர்கள், நட்சத்திரங்களையே உற்று நோக்கி கவனிக்கிற வான ஆராய்ச்சியாளர்கள். அவர்கள் அப்பொழுது "ஞானவான்கள்" என்றே அழைக்கப்பட்டனர். அவர்கள் இன்றைக்கு இன்னமும் அப்படிப்பட்டவர்களாகவே இருந்துவருகிறார்கள். நான் அவர்களோடு அநேக முறை பேசியிருக்கிறேன். அவர்கள் எப்பொழுதுமே மூவராய் செல்கிறார்கள், ஏனென்றால் மூன்று ஒப்புதல் அளிப்பதாய் இருக்கிறது. மேலும் மூன்று என்பது ஓர் உறுதி செய்தலாயிருக்கிறது. அண்மையில் நான் அவர்களை இந்தியாவில் வீதியில் உட்கார்ந்திருக்கக் கண்டேன், ஒருவிதமாக கால்களை மடக்கி சுருட்டிக்கொண்டு அமர்ந்திருந்தனர். முதலில் இருந்த இந்த வான சாஸ்திரிகளைப் போன்றே உடை

உடுத்தியிருந்தனர். அவர்கள் தங்களை வேறுவிதமாக மாற்றிக்கொள்வதில்லை.

67. அவர்கள் ஒரே மெய்த் தேவனையே ஆராதிக்கிறவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் ஆபிரகாமிற்கு மற்றொரு மனைவியின் மூலமாகப் பிறந்த பிள்ளைகள். ஒரே மெய்தேவன் உண்டு என்றே அவர்கள் விசுவாசிக்கிறார்கள். நான் எத்தனையோ முறைகள் முகமதிய மதக்குருக்கள், "ஒரே மெய்யான ஜீவிக்கிற தேவன் உண்டு என்றும், முகமதுவே அவருடையத் தீர்க்கதரிசி" என்றும் வலியுறுத்திக் கூறித் தம்பட்டம் அடிப்பது போன்று கூச்சலிடுவதையும் நான் கண்டிருக்கிறேன்.

68. நாமோ, "ஒரே மெய்யான ஜீவிக்கிற தேவன் உண்டு என்றும், இயேசுவே அவருடைய குமாரன்" என்றும் கூறுகிறோம்.

அவர்களோ "தேவனுக்கு ஒரு குமாரன் இருக்கிறார் என்பதை நம்ப இயலாது" என்கிறார்கள்.

69. இந்தியாவில் ஒரே நேரத்தில் ஏறக்குறைய ஒரு இலட்சம் பேர் அவருடையப் பிரசன்னத்தின் காரணமாகவும், அவர் செய்த அற்புதத்தினாலும்

கிறிஸ்துவண்டை வருவதைக் காணும் சிலாக்கியம் பெற்றேன்.

70. இப்பொழுது இந்தியர்கள், நாம் வான சாஸ்திரிகள் என்று அழைக்கும் முதலில் இருந்த இவர்கள் வேதாகமத்தில் மேதிய பெர்சியர்களாகச் சுட்டிக்காட்டப்பட்டனர். நீங்கள் அதை தானியேல் இரண்டாம் அதிகாரத்தில் கண்டறியலாம். அந்தக் காரணத்தினால்தான் அந்த மிஷனெரி, "முகமதியனை அவனுடைய நம்பிக்கையிலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றுவது மிகவும் கடினமானதாயிருக்கிறது, ஏனென்றால் அவர்கள் மேதிய பெர்சியர்களிலிருந்து வந்தவர்கள் என்றும், அவர்களுடையப் பிரமாணங்கள் திருத்தப்படுகிறதோ அல்லது மீறப்படுகிறதோ இல்லை" என்றும் கூறினார். வேதத்தை வாசிக்கிற உங்களில் அநேகருக்கு அது தெரியும், மேதிய பெர்சியர்கள், அவர்கள் தங்களுடையப் பிரமாணங்களைத் திருத்துகிறதில்லை. ஒரு காரியம், ஒரு அறிவிப்புச் செய்தி கூறப்பட்டபோது, அது நித்தியமாக நீடித்தது. ஆகையால் ஒரு முகமதியன் தன்னுடையத் தடையை மீறி கிறிஸ்தவ மார்க்கத்திற்குச் செல்லும் போது, எல்லாமே அவனுக்கு மரித்ததாகி விடுகிறது, ஏனென்றால்

அவன் அவர்களுடைய சட்டத் திட்டங்களை உடைத்தெறிந்துவிடுகிறான்.

71. இந்த மனுஷரோ, அவர்கள் ஒரே மெய்யான தேவன் பேரில் காத்திருந்தனர். அவர்கள் அவரை ஒரு புனிதமான அக்கினியின் வெளிச்சத்தில் ஆராதிக்கின்றனர். அவர்கள் இந்த அக்கினியைச் சுற்றி உண்டாக்கிவிட்டு, ஆண்டவர் பேரில் காத்திருப்பார்கள். அவர்களில் அநேகர் இன்றைக்கு நாம் வைத்துள்ளதுபோல வான ஆராய்ச்சிக் கூடங்களை வைத்திருந்தனர். எனவே அவர்கள் மலைகளில் உயரமான இடத்தில் இருந்த அந்த ஸ்தலங்களுக்குச் சென்றுவிடுவார்கள். அவர்கள் அங்கிருந்து நட்சத்திரங்களின் ஒவ்வொரு அசைவையும் கவனிப்பார்கள். அவர்கள், “தேவன் பூமியின் மேல் எந்தக் காரியத்தையாவது செய்வதற்கு முன்னர், அவர் அதை முதலில் வானத்தில் காண்பிக்கிறார்” என்று வலியுறுத்திக் கூறுகிறார்கள். அவர்கள் கூறுவது சரியே.

72. தேவன் எப்பொழுதுமே முதலில் அதை வானத்துக்குரிய அடையாளங்களின் மூலமே காண்பிக்கிறார். அவர் எப்போதும் எந்தக் காரியத்தையுமே செய்யத் தொடங்கினபோது, அதை முதலில் வானத்திற்குரிய ஓர்

அடையாளத்தினால் காண்பிக்காமல் செய்ததுண்டா? அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள், ஒவ்வொரு காலத்திலுமே அதை நீங்கள் அறிய விரும்பினால், தேவன் பூமியின் மேல் எந்தக் காரியத்தையும் செய்யும் முன்னர், அவர் அதை முதலில் எப்பொழுதுமே வானத்திலே அடையாளங்களாகக் காண்பிக்கிறார். ஒவ்வொரு காலத்திலும், ஒவ்வொரு நேரத்திலும் இயற்கைக்கு மேம்பட்டதிலிருந்து வந்து இயற்கையானதற்குள்ளாக விழுந்து வெளிப்படுத்தப்படுகிறது.

73. ஆகையால் இந்த நேரமும் வித்தியாசமானதாய் இருக்கவில்லை. எனவே அந்த வான சாஸ்திரிகள் காணக் கூடியதாயிருந்த அந்த வானொளிக் கோளங்களை, நட்சத்திரங்களை, சந்திரனை மற்றும் அவர்களுடையக் கண்களினால் காணக்கூடிய ஒவ்வொரு காரியத்தையும் கவனித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொன்றின் நிலையையும், ஒவ்வொரு நட்சத்திரமும் எங்கே உறுதியாக நிலைத்திருக்கும் என்பதையும் அறிந்திருந்தனர். நாம் வேதவாக்கியங்களை அறிந்திருப்பதுபோல அவர்கள் வானசாஸ்திர நாள்காட்டியை நன்கு அறிந்திருந்தனர். ஒரு சிறு காரியம் அதனுடைய ஸ்தானத்திலிருந்து நிலைமாறினாலும் அவர்கள்

அதை அறிந்திருந்தனர், ஏனென்றால் அது ஓர் அடையாளமாய் இருக்கிறது. எனவே அவர்கள் அந்த அடையாளங்களை மிகவும் கவனமாக இரவின் ஒவ்வொரு மணி நேரத்திலும் கவனித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் அதையே கவனித்திருந்தனர். அப்பொழுது விசித்திரமான ஒன்று ஆகாயத்தில் தோன்றி அவர்கள் எல்லோரையுமே தொல்லைப்படுத்தப் போவதாயிருந்தது என்பதில் வியப்பொன்றுமில்லையே! எனவே அந்த வருகையாளர் அவர்களை சற்று அசைத்ததில் வியப்பொன்றுமில்லையே! காரணமென்னவெனில் அவர்கள் அந்த நட்சத்திரங்கள் ஒவ்வொன்றைக் குறித்தும் அறிந்திருந்தனர். மேலும் அவர்கள் விஞ்ஞானப்பூர்வமாக அவைகள் ஒவ்வொன்றினுடைய அசைவையும் ஆய்ந்து அறிந்திருந்தனர்.

74. எனவே அவர்கள் எப்பொழுதும் இந்த அக்கினியைச் சுற்றி ஒன்று கூடுவர். அவர்கள் அந்த நெருப்பைப் புனிதமான எண்ணெயின் மூலம் பற்ற வைத்து, அதை எரிய வைப்பர். அங்கிருந்து அவர்கள் கவனித்துப் பார்ப்பார்கள், ஏனென்றால், “தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருந்தார்” என்று அவர்கள்

விசுவாசித்தனர். அவர் பட்சிக்கிற அக்கினியாகவே இருக்கிறார்.

75. நீங்கள் பாருங்கள், அப்போஸ்தலருடைய நடபடிகள் 10ம் அதிகாரத்தில் 35-வது வசனத்தில், "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன்" என்றும் வேதவசனம் கூறுகிறது. அது நீங்கள் மெத்தோடிஸ்டுகளாய், பாப்டிஸ்டுகளாய், பிரஸ்பிடேரியன், லூத்தரன் அல்லது கத்தோலிக்கர் அல்லது நீங்கள் யாராய் வேண்டுமானாலும் இருக்கலாம். நீங்கள் உங்களுடைய இருதயத்தில் உத்தமமாயிருந்தால், தேவன் உங்களை அவருடைய இரக்கத்தின் தெய்வீக வெளிச்சத்திற்குள்ளாகக் கொண்டுவர உங்களுக்கு ஒரு தருணத்தை அளிப்பார். அவர் தேவனாயிருக்கிறார். அவர் தம்முடைய வாக்குத்தத்தத்தின் மூலமாய் கடமைப்பட்டிருக்கிறார். அதன்பின்னரோ நீங்கள் அதை ஏற்றுக் கொண்ட பிறகு நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது உங்களைப் பொறுத்ததாயுள்ளது. அதன்பின்னர் உங்களால் நியாயத்தீர்ப்பில் நிற்க முடியும். ஆனால் அதுவரைக்கும் நீங்கள் பொறுப்புள்ளவர்கள்

அல்ல, எனவே நீங்கள் அறிந்துள்ள எல்லாவற்றிலும் நீங்கள் நடந்து கொண்டிருக்கிறீர்கள்.

76. ஆகையால் இந்த வான சாஸ்திரிகள் இந்தப் புனிதமான ஆலயத்தின் அக்கினியை ஆராதித்து, அது எரியும்போது, அதனுடைய புனிதமான அக்கினி ஜீவாலைகளை உற்று நோக்கி, அது பட்சிக்கும் அக்கினியாயிருந்த தேவனின் ஆவியின் ஏவுதலாயிருக்குமா என்று வியப்புற்று, அதன் பின்னர் மேலே ஏறிச் செல்வர். அவருடையப் பிரசன்னத்தில் பூமி அழிந்துபோகும். அவன் அதற்குள்ளாக நோக்கிப் பார்க்கும்போது, அப்பொழுதே அவன் தன்னுடைய ஆவியின் ஏவுதலைப் பெற்றுக்கொள்வான். அதன்பின்னர் அவன் அந்தக் கோபுரத்திற்குள்ளாக மேலே ஏறிச்சென்று எந்த நட்சத்திரமாவது நகர்ந்துள்ளதா என்று பார்க்கும்படிக்கு சுற்றும் முற்றும் நோக்கிப் பார்ப்பான். அவ்வாறு அவர்கள் இதை வருடா வருடம், நாளுக்கு நாள், மணிக்கு மணி, ஆயிராமாயிரம் ஆண்டுகாலமாக செய்து வந்தனர். அவர்கள் நட்சத்திரங்களை, கோளங்களை கவனித்து வந்தனர். அப்பொழுது அவர்கள் தோல் சுருள்களைக் கொண்டு வந்து, அவைகளை வாசித்துப் பார்ப்பார்கள்.

77. அதுவோ இதன் பேரிலான குறிப்பிட்ட இரவாய் இருந்திருக்க வேண்டும். அதாவது அவர்கள் சாம்ராஜ்ஜியத்தின் வீழ்ச்சியைக் குறித்தும், இராஜ்ஜியங்கள் பலவீனமடைந்து வீழ்ச்சியுறுவதையுங் குறித்தும், எப்படியாய் உலகமானது அந்த ஸ்தலங்களில் உயர்ந்திருந்தும் மீண்டும் இடிந்த விழுந்துபோயின என்பதைக் குறித்தும் ஆராய்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது அங்கே ஒரு தோல் சுருள் கொண்டு வரப்பட்டிருந்தது. அது தானியேலின் புத்தகமாய் இருந்திருக்க வேண்டும். அவர்களோ அங்கே ஏதோ ஒரு காரியத்தை, அதாவது தானியேல், "ஒரு கல் கைகளால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டு வரும்" என்று கூறியிருந்ததை ஆராய்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

78. அப்பொழுது அவர்கள் இதன் பேரில் சிந்தித்துக் கொண்டிருக்கையில், அந்தப் புனித அக்கினி எரிந்து கொண்டிருக்கையில், இது தோன்றியிருக்க வேண்டும். அதாவது அப்பொழுது அந்த நட்சத்திரங்களுக்கு மத்தியில் விசித்திரமான ஒன்று இருந்ததை அவர்கள் கவனிக்க நேர்ந்தது, அது அவர்கள் எண்ணிப்பார்க்க முடியாததாயிருந்த ஒரு காரியமாயிருந்தது. அதைக் குறித்து அவர்களுடைய தோல் சுருள்கள் ஒன்றுமே

கூறியிருக்கவில்லை. அவர்களுடைய எழுத்து ஆவணங்களும் அதைக் குறித்து ஒன்றுமே கூறியிருக்கவில்லை, ஆனால் அங்கே அது இருந்ததே! எனவே அவர்களால் அதை மறுதலிக்க முடியாமற்போயிற்று. அவர்கள் வானொளிக் கோளங்களைக் கவனித்து வந்தனர். எனவே அவர்கள் இயற்கைக்கு மேம்பட்ட ஏதோ ஒன்று நிகழ்ந்துள்ளது என்பதை அறிந்து கொண்டனர்.

79. ஓ, அவர் மிகவும் நல்லவராயிருக்கிறாரே! அவர் ஜீவனுக்கென்று நியமித்திருக்கிற ஒவ்வொரு நபரின் கவனத்தையும் தெரிந்து கொள்வார், அவர்களோ தங்களுடைய சொந்த வழிகளில் ஆராதித்துக்கொண்டிருக்கலாம். ஆனால் அவர் தேவனாயிருக்கிறார், அவர் மானிடரின் இருதயங்களை அறிந்திருக்கிறார். அவர் அவர்களை ஒரு ஸ்தலத்திற்கு கொண்டு வருகிறாரே! "ஆழம் ஆழத்தை நோக்கிக் கூப்பிடும்போது," அந்த அழைப்பிற்கு பதிலளிக்க ஓர் ஆழம் இருக்கதான் வேண்டும். ஒரு மனிதன் ஏதோ ஒன்றிற்காகத் தாகமாயிருந்துகொண்டிருந்ததால், அந்தத் தாகத்தைத் தணிக்க, அங்கே அதற்குப் பதிலளிக்க ஏதோ ஒன்று உள்ளது என்பதையே அது காண்பிக்கிறது.

80. நான் அடிக்கடி கூறியிருப்பதுபோன்றே, மீனுடைய முதுகில் ஒரு துடுப்பு இருப்பதற்கு முன்பே, அது நீந்துவதற்கு முதலில் தண்ணீர் இருந்தது, இல்லையென்றால் அதற்கு நீந்த ஒரு துடுப்பே இருந்திருக்காது. பூமியிலே ஒரு மரம் வளருவதற்கு முன்பே, பூமியானது முதலில் இருந்திருக்க வேண்டும், இல்லையென்றால் மரமே இருந்திருக்காது.

81. சில ஆண்டுகளுக்கு முன்னர் நான் அதை ஆராய்ந்து படித்துக்கொண்டிருக்கையில், செய்தித்தாளில் ஒரு துண்டில் நான் அதைக் கவனித்தேன். அதாவது அதில் ஒரு சிறு பையன் பள்ளிக்கூடத்தில் பென்சில்களின் ரப்பர் அழிப்பான்களை (Erasers) சாப்பிடுகிறான் என்றிருந்தது. அப்பொழுது ஒருநாள் அவன் தன்னுடைய இருசக்கர மிதிவண்டியினுடைய ரப்பராலான கால் மிதியடியை பின்னால் உள்ள தாழ்வாரத்தில் சாப்பிட்டுக் கொண்டிருப்பதை அவனுடைய தாயார் கண்டறிந்தாள். அப்பொழுது அவளோ இந்தச் சிறு பையனோடு உள்ள காரியம்தான் என்ன என்றே வியப்புற்றுப் போனாள். எனவே அவள் அவனைப் பரிசோதனைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு சென்றாள். அவளுடைய சிறு பையனை

பரிசோதித்துக் கொண்டிருக்கையில், மருத்துவரோ அவனுக்கு கந்தகம் தேவைப்பட்டதைக் கண்டறிந்தார். கந்தகமோ ரப்பரில் உள்ளது. ஆகையால் அவனுடைய சரீர அமைப்பில் கந்தகத்திற்கான ஏக்க உணர்வு உண்டாயிருப்பதற்கு முன்னமே, அந்த ஏக்க உணர்விற்குப் பதிலளிக்க ஒரு கந்தகம் இருக்க வேண்டியதாயிருந்தது, இல்லையென்றால் அவனுக்கு அந்த ஏக்க உணர்வே ஒருபோதும் இருந்திருக்காது.

82. சிருஷ்டிப்பு என்ற ஒன்று இருப்பதற்கு முன்பு, அந்தச் சிருஷ்டிப்பை உண்டாக்க ஒரு சிருஷ்டிகர் இருக்க வேண்டும்.

83. இன்றைக்கு இங்கு உள்ள புருஷனோ அல்லது ஸ்திரீயோ, பையனோ அல்லது பெண்ணோ ஜீவனை வாஞ்சிக்காமல் இருந்தால் என்னவாகும்? இன்றைக்கு என்றென்றுமாய் ஜீவிக்கும்படி ஜீவனை விரும்பாமலிருக்கும் மானிடனை எனக்குக் கூறுங்கள். அப்பொழுது ஒரு பித்து பிடித்த நபரே அதை வாஞ்சிக்காமலிருக்கிறான் என்பதை நான் உங்களுக்குக் காண்பிப்பேன், ஏனென்றால் ஜீவனைப் பார்க்கிலும் மகத்தானது ஒன்றுமேயில்லையே.

84. நீங்கள் உலகத்தையும், அதனுடைய எல்லாப் பொருட்களையும் சொந்தமாகக் கொண்டிருந்தால், அப்பொழுது நீங்கள் இன்றைக்கு என்னக் கொடுப்பீர்கள்? நீங்கள் என்றென்றுமாய் ஜீவிக்க அதனைப் பெருமையோடு அளித்துவிட்டு ஒரு பரம ஏழையாகவே இருப்பீர்கள். ஜீவனாயிற்றே! வயோதிக ஜனங்களாகிய உங்களில் எத்தனைபேர் நீங்கள் மீண்டும் வாலிப மனிதனாக அல்லது வாலிப ஸ்திரீயாக மாற உங்களுக்குச் சொந்தமான எல்லாவற்றையுங் கொடுப்பீர்கள்? [சகோதரன் பிரான்ஹாம் பிரசங்க பீடத்தை மூன்று முறைகள் தட்டுகிறார் - ஆசி.] ஒவ்வொரு மனிதனும் அதற்காகவே தேடுகிறான். ஏன்? அது எங்கோ உள்ளது இல்லையென்றால் நீங்கள் அதற்காக ஒருபோதும் ஏங்கவே மாட்டீர்கள்.

நீங்கள் சுகவீனமாயிருந்தால், சுகவீனமான ஜனங்களாகிய நீங்கள் இன்றைக்கு இங்கே ஏன் இருக்கிறீர்கள்? நீங்கள் எதற்காகத் தேடிக்கொண்டிருக்கிறீர்கள்? ஜெபத்திற்காக உங்களை வரும்படிச் செய்கிறது எது? காரணம் உங்களுக்குள்ளாக ஏதோ ஒன்று உள்ளதே! நீங்கள் எந்தச் சபையைச் சார்ந்திருந்தாலும், நீங்கள் என்ன பெயரிடப்பட்டிருந்தாலும் கவலைப்பட வேண்டியதில்லை, அதற்கு இதனோடு எந்த

சம்மந்தமும் கிடையாது. நீங்கள் ஒரு மானிட வர்க்கமாயிருக்கிறீர்கள். நீங்கள் தேவனுடைய ஒரு சிருஷ்டிப்பாயிருக்கிறீர்கள். உங்களுக்குள்ளாக இருக்கிற ஏதோ ஒன்று உங்களை எங்கோ இழுக்கிறதாயுள்ளது. உங்களுடைய இருதயத்தில் ஓர் இழுப்பு நிச்சயமாக இருக்கின்றவரையில், மருத்துவர் ஒருக்கால் உங்களைக் கைவிட்டப் பிறகும் இன்னமும் நம்பிக்கை உண்டாகும். தேவனுடைய சுகமளிக்கும் வல்லமையான அவருடைய ஐஸ்வரியமான ஓர் ஊற்று எங்கோ திறந்திருக்கத்தான் வேண்டும், இல்லையென்றால் உங்களுக்கு அதற்கான ஏக்கமே ஒருபோதும் இருக்காது. எனவே அது எங்கோ இருந்தாகத்தான் வேண்டுமே!

85. நீங்கள் அந்த இயேசுவைக் காண வாஞ்சித்தால், யேகோவாவைக் காணும்படியாக ஏதோ ஒன்று உங்களை வாஞ்சை கொள்ளச் செய்யுமேயானால், அப்பொழுது அவர் எங்கோ இருக்கிறார் இல்லையென்றால் நீங்கள் அதனை ஒருபோதும் வாஞ்சிக்கவே மாட்டீர்கள். தேவன் வான சாஸ்திரிகளுக்கு அல்லது எவருக்குமே நல்லவராக இருப்பதுபோல உங்களுக்கும் அவ்வளவு நல்லவராகவே இருக்கிறார். நீங்கள் அவருக்காக வாஞ்சித்தால், “நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனென்றால்

அவர்கள் பருகித் திருப்தியான பங்கினையடையும்படிக்கு அந்த ஊற்றண்டைக்குக் கொண்டு வரப்படுவார்கள்".

86. ஜனங்கள் இங்கே ஒருக்கால் மரிக்கலாம். நீங்கள் மரிக்க வேண்டியதில்லை, உங்களுக்காக ஏதோ ஒன்று விடப்பட்டிருப்பதை நீங்கள் உணருகிறீர்கள். அந்தக் காரணத்தினால்தான் நீங்கள் இங்கே இருக்கிறீர்கள். நீங்கள் நரம்புத் தளர்வுற்று உங்கள் சிந்தையை சரிசெய்து ஒருமுகப்படுத்த முடியாமலிருக்கலாம், ஆனால் உங்களுக்குள் இருக்கிற ஏதோ ஒன்று, "என்னை மீண்டும் சீர்படுத்தி சரியான நிலைக்கு கொண்டுவரக் கூடிய ஏதோ ஒன்று உண்டு" என்று உங்களிடத்தில் கூறிக்கொண்டிருக்கிறது. அவமானத்தோடு வீதியில் நடந்துகொண்டுள்ள விபச்சாரிகளாயிருக்கலாம்; தங்களுடையக் கணவன்மார்களுக்கு அநீதியாய் வாழ்ந்துள்ள பெண்களாயிருக்கலாம்; தங்களுடைய விவாக உறுதிமொழியை முறித்துப்போட்டிருக்கலாம்; குடிப்பழக்கத்தில் மூழ்கி பாவப்பட்டியலில் உள்ள ஒவ்வொரு காரியத்தையும் செய்துள்ள மனுஷராயிருக்கலாம்; ஆனாலும் எங்கோ ஓர் ஊற்று உண்டு என்று ஏதோ ஒன்று உங்களிடம் சொல்லுகிறது.

87. நீங்கள் கத்தோலிக்கராயிருக்கலாம், நீங்கள் யூதராயிருக்கலாம், நீங்கள் என்னவாக வேண்டுமானாலும் இருக்கலாம், ஆனால் நீங்கள் தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்ட ஒரு மானிடனாய் இருக்கிறீர்கள். எனவே அவர் உங்களை இழுத்துக் கொண்டும், உங்களை அழைத்துக் கொண்டுமிருக்கிறார். அந்த வான சாஸ்திரிகள் வழிநடத்தப்பட்டது போலவே நீங்கள் வழி நடத்தப்படுகின்றீர்கள்.

88. அவர்கள் ஆராய்ந்து பார்த்து விட்டு அப்பால் நோக்கிப்பார்த்து, அந்த வெளிச்சத்தைக் கண்டபோது, அது என்னவாயிருந்தது என்பதை அவர்களால் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. அதைக் குறித்து நாம் சிந்தித்துப் பார்ப்போமாக, அவர்கள்........ அதற்கு அடுத்த நாள் உறங்கச் சென்று கீழே படுத்துக்கொண்டனர். அப்பொழுது அவர்கள் தொல்லைக்குள்ளாக்கப்பட்டு, அதை தொடர்ந்து கவனித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவனாகிய பில்தாது என்பவன் ஒரு சொப்பனம் கண்டிருக்க வேண்டும். அவன் ஒரு சொப்பனம் கண்டிருந்தான் என்றே நாம் கூறலாம். அவன், "ஒரு நாட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும். எங்கோ இராஜாவாக யூதர்களுக்கு மத்தியிலே ஒரு குழந்தை பிறக்க வேண்டியதாயுள்ளது. நீங்கள்

காண்கிற அந்த ஒளியே இப்பொழுது உங்களை உலகத்தில் வந்து ஒளியைத் தேடுகிற எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற அந்தப் பரிபூரண ஒளியண்டை உங்களைக் கொண்டுச் செல்லும்" என்று தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டிருந்தது என்பதைக் குறித்து சொப்பனங்கண்டான்.

89. பாருங்கள், எந்த மார்க்கமாயிருந்திருந்தாலும் கவலைப்பட வேண்டியதில்லை, அவர்கள் உண்மையாகவே தேவனுக்கு பயந்திருந்தால், அப்பொழுது தேவன் அவர்களை இந்த ஒளியண்டைக்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறார். அவர் அவர்களை அவர்களுடைய சொந்த வழியிலேயேக் கொண்டு வருகிறார்.

90. சில சமயத்தில் அவர் அவர்களைத் துன்பங்களின் மூலமாகக் கொண்டு வருகிறார். சில நேரத்தில் அவர் அவர்களை....... கொண்டு வருகிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள், இந்தக் கடைசி நாட்களில் அவர்கள் துன்பங்களின் மூலமாக வருவார்கள் என்று அவர் தீர்க்கதரிசனமாயுரைத்துள்ளார். அவர் கலியாண விருந்தினை ஆயத்தம் செய்தார். அப்பொழுதோ எவருமே - யாருமே வரவில்லை. எனவே அப்பொழுது அவர், "நீ பட்டணத்தின்

தெருக்களிலும் வீதிகளிலும் சீக்கிரமாய் போய், ஊனரையும், சப்பாணிகளையும், குருடரையும், துன்பப்படுவோரையும் என்னுடைய மேஜைகள் நிரம்பும்படியாகக் கூட்டிக் கொண்டுவருவார்கள்" என்றார்.

91. இந்தக் கடைசி நாளில் அவர் ஆவியில் அசைவாடி அவர்களை ஒன்றுசேர்த்துக் கொண்டு வரும்படிக்கு அவர்களை ஒவ்வொரு வாழ்க்கை முறையிலிருந்தும், வாழ்க்கையின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் தேடிக்கொண்டிருக்கிறார். எல்லா ஸ்தாபனங்களும், ஜீவனுக்காக வாஞ்சிக்கிற யாவருக்குமே அவருடைய மகிமையின் சரீரத்தினுடைய அவருடையப் பிரசன்னத்தில் நடக்கவும், அதை ஏற்றுக்கொள்ளவும் ஓர் உரிமை உண்டு; ஏனென்றால் அவர் ஜீவனுள்ள தேவனுடையக் குமாரனாய் இருக்கிறார், அவர் எப்பொழுதும் பிரகாசித்ததுபோன்றே இப்பொழுதும் நம் மத்தியில் இன்னமும் விடிவெள்ளி நட்சத்திரமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்.

92. அதே ஒளியே பவுலை தமஸ்குவிற்கு செல்லும் அவனுடைய வழியிலே இருக்கையில் அவனை அடித்து வீழ்த்தியது. அவன் தன்னுடைய இருதயத்தில் உத்தமமாயிருந்து அதிகமாய்

சத்தமிட்டுக் கொண்டும், ஆரவாரமிட்டுக்கொண்டும், மிக அதிக இரைச்சலை உண்டாக்கிக் கொண்டிருந்த ஒரு கூட்ட ஜனங்களைத் துன்புறுத்த முயற்சித்தான். அவன் அவர்களை அடித்து வீழ்த்தவே புறப்பட்டுச் சென்றான். மேலும் அவன் செய்துகொண்டிருந்தது சரியென்றே அவன் எண்ணியிருந்தான். அப்பொழுது அவனுடைய வழியில் அங்கே அக்கினி ஸ்தம்பமானது நின்று அவனைத் தரையிலே விழத்தள்ளிற்று. பின்னர், “சவுலே, நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்?” என்று கூக்குரலிட்டார்.

அதற்கு அவனோ, “ஆண்டவரே, நீர் யார்?” என்று கேட்டான்.

அப்பொழுது அவன் வைராக்கியங்கொண்டிருந்த யேகோவாவோ, “நான்தான் இயேசு” என்றார்.

93. அவன் யேகோவாவைக் குறித்து வைராக்கியமாயிருந்தான். ஆனால் இயேசுவைக் குறித்தோ ஒன்றுமே அறியாமல், “அவர் ஒரு - ஒரு குற்றவாளியாயிருந்தார்” என்று மட்டுமே அறிந்திருந்தான். ஆனால் தேவன் அவனை அனுப்பினார். உலகம் எப்போதும் கண்டிருந்ததிலேயே மகத்தான மிஷினெரியாக

அவன் மாறினான். ஏன்? அவன் உத்தமமாயிருந்தான்; அவன் விசுவாசித்தான். எனவே தேவன் அவனை ஒளியினால் வழிநடத்தினார்.

94. இன்றைக்கு அவருடைய புகைப்படத்தையுங்கூட காணும்படியான கிறிஸ்தவர்களாக நம்மை உணர்வுள்ளவர்களாக்கியுள்ளதைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? நானோ இப்பொழுது நூறு சதவீதம் முதன்மையான அந்த ஒன்றையே உடையவனாயிருக்கிறேன். ஆனால் நம்முடையப் பாவங்களிலிருந்து கழுவப்பட, அவருடைய குமாரனின் நீதியில் சுத்தமாக்கப்பட, கர்த்தராகிய இயேசுவின் குமாரரும், குமாரத்திகளுமாக, நம்மை மாற்றுகிற தேவனுடைய ஆவியினால் புதிதாய் பிறக்கும்படி அந்த யேகோவா தேவன் அவருடைய குமாரனின் இரண்டாம் வருகைக்கு முன்னர் நம்மை வழிநடத்த, நம்மைத் தேற்ற, அந்த ஊற்றண்டைக்கு நம்மைக் கொண்டுவரும்படிக்கு அவருடைய ஒளியை அனுப்பியிருக்கிறார்.

95. நாம் நம்முடைய சிந்தையிலிருந்து மாற்றப்பட்டிருப்பதே, நம்முடைய மனப்பான்மையிலிருந்து மாற்றப்பட்டிருப்பதே, உட்புறத்தில் சம்பவித்த ஏதோ ஒரு காரியத்தினால்

மாற்றப்பட்டிருப்பதே பிறப்பு என்று பொருள்படுகிறது. இந்த உலகத்தில் உங்களை மாற்றக் கூடிய மார்க்கம் ஒன்றுமே இல்லை, உங்களை மாற்றப் போதுமானத் தண்ணீரும் இல்லை, உங்களை மாற்றப் போதுமான சடங்கு முறைகளோ அல்லது பிரசங்கங்களோ கிடையாது. தேவனுடையக் குமாரனாகிய இயேசுவின் இரத்தமே அதைச் செய்கிறது. சிவிங்கி தன் புள்ளிகளை நக்கி தன்னைவிட்டு மாற்றிக்கொள்ள முடியாததுபோல, நீங்கள் சபையில் சேர்ந்துகொள்வதன் மூலம் உங்களை ஒருபோதும் சுத்தமாக்கிக்கொள்ள முடியாது. அது அதிகமாக நக்குவதனால் அந்தப் புள்ளிகள் இன்னமும் பளிச்சென்று காணப்படும். அது அவைகளை வெளிக்காட்ட மாத்திரமே செய்கிறது. எனவே சபைகளில் சேர்ந்துகொள்வதனால், உங்களுடைய சொந்தத் தகுதிகளின் பேரில் செயல்பட முயற்சித்தல் - போன்றவைகளினால் நீங்கள் உங்களுடையக் குறைவையே, உட்புறத்தில் உள்ள பசியையே, இன்னும் நிரப்பப்படாமலிருக்கிற ஏதோ காரியத்தையே காண்பிக்கிறீர்கள். முயற்சி செய்வதை விட்டுவிடுங்கள்; அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது அவர் உங்களை அந்த ஒளியண்டை நடத்திச் செல்வார்.

96. இந்த ஜனங்கள் இந்தக் குழந்தையைத் தொழுதுகொள்ள வேண்டும் என்று இந்தச் சொப்பனத்தினால் அவர்கள் போக வேண்டியதாயிருந்தது. அவர்கள் ஐஸ்வரியமுள்ள மனுஷராயிருந்தனர். எனவே அவர்கள் சேகரித்தத் தங்களுடைய ஐஸ்வரியங்களான தூபவர்க்கம், பொன், வெள்ளைப்போளம் போன்றவைகளை பொக்கிஷங்களாக எடுத்துக்கொண்டனர். பின்னர் மூவரும் ஒரு சாட்சியாகப் புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் தங்களுடைய ஒட்டகங்களின்மேல் சேணங்கட்டி, அவைகளை எடுத்துக்கொண்டு, அந்த நட்சத்திரத்தைப் பின்தொடர்ந்து சென்றனர். எனவே அவர்கள் அந்த மலையின் மீது ஏறி கடந்து கீழே வந்து டைகீரிஸ் ஆற்றையும் துறையண்டைக் கடந்து சிநேயார் பள்ளத்தாக்கிற்குள் சென்றிருந்திருக்க வேண்டும். நட்சத்திரமோ அவர்களை எருசலேமுக்கு வழி நடத்திக்கொண்டிருந்தது.

97. எருசலேமோ எப்பொழுதுமே உலகத்தின் மார்க்கரீதியான அரியணையாகவே இருந்து வருகிறது, ஏனென்றால் மகத்தான இராஜா அங்கே ஜீவித்திருந்தார். அது அந்த அதே நகரத்தில், அங்குதான் ஆபிரகாம் இராஜாக்களை முறியடித்து வருகையில் ஒரு இராஜாவை சந்தித்த இடமாய் இருந்தது, அவருடையப் பெயர் மெல்கிசேதேக்கு

என்பதாய் இருந்தது. அவருக்குத் தகப்பனும் கிடையாது, தாயும் கிடையாது; நாட்களின் துவக்கமும், ஜீவனின் முடிவுமில்லாதவராய் இருக்கிறார். கோத்திரப்பிதா ஆபிரகாம் முதலாய் இவருக்குப் பத்தில் ஒன்றை, தசமபாகத்தைச் செலுத்தினான். "தகப்பனும் இல்லை, தாயும் இல்லை; அவருக்கு காலத்தின் துவக்கமும் இல்லை, அவருக்கு முடிவின் நேரமும் இல்லை." அந்த மகத்தான இராஜா சாலேமிற்கு வந்தார், அது எருசலேமாயிருந்தது.

98. அந்த நட்சத்திரமோ இந்த வான சாஸ்திரிகளை இந்த உலகத்தின் மார்கரீதியான அரியணைக்கு வழிநடத்திச் சென்றது, ஆனாலும் வருத்தமாயிருந்த காரியமென்னவென்றால், அவர்கள் அங்கு சென்றடைந்தபோது, அதைக் குறித்து அங்கிருந்த அவர்களுக்கு ஒன்றுமே தெரியாதிருந்தது. எனவே இந்த வான சாஸ்திரிகள் வீதிகளில் மேலும் கீழுமாக விரைந்து சென்றனர். நட்சத்திரமோ, அவர்கள் பெத்லகேமை சென்றடைந்தவுடன்....... அவர்கள் எருசலேமை சென்றடைந்தவுடனே, நட்சத்திரம் மறைந்துவிட்டது, எனவே அது அதற்கு மேல் அவர்களை வழிநடத்தவில்லை. தேவன் என்ன

செய்துகொண்டிருந்தார்? எப்படி அதை ஜனங்கள் புரிந்துகொள்ள முடியும்..... என்பதைக் காண்பிக்க.....

99. தேவனுடைய மகத்தான வெளிச்சம் பிரகாசிக்கத் துவங்கியிருக்கும்போது, இன்றைக்கும் இன்னமும் நம்முடைய வேத சாஸ்திரங்கள் எல்லாவற்றையுங்கொண்டுள்ள நம்முடையப் பெரிய சபைகளில் அதைக் குறித்து ஒன்றுமே அறியாதிருக்கின்றனர். வாடிகன் நகரத்திற்கு இந்தக் காரியங்களைக் குறித்து என்னத் தெரியும்? சபை ஸ்தாபனங்களுக்கு என்னத் தெரியும்? ஒன்றுமே தெரியாதே! நாமோ மற்றொரு கிறிஸ்துமஸில் இருக்கிறோம்.

100. அவர்கள் ஏதோ ஒரு காரியத்தைக் கண்டிருந்தனர் என்றே இந்த மனிதர்கள் அறிந்திருந்தனர். அங்கே ஏதோ ஒரு காரியம் சம்பவித்திருந்தது என்றே அவர்கள் அறிந்திருந்தனர். ஏனென்றால் அவர்கள் வானொளிக் கோளங்களை ஆராய்ந்து பார்த்திருந்தனர். இதோ ஒரு புதியதாய் தோன்றின ஒன்று இருந்ததே. அவர்கள் அதன் மூலமாகவே விசித்திரமாக வழிநடத்தப்பட்டிருந்தனர். ஆனால் இப்பொழுது நகரத்திலோ அவர்கள் ஒவ்வொரு சிறு வீதிகளிலும் மேலும் கீழுமாகச் சென்று, "யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?

நாங்கள் அவருடைய நட்சத்திரத்தைக் கிழக்கிலே கண்டோம்" என்று கூச்சலிட்டனர்.

101. இப்பொழுது அவர்கள் கிழக்கில் இருந்தனர். அவர்கள் அவருடைய நட்சத்திரத்தை மேற்கில் கண்டனர். ஆனால், "நாங்கள் கிழக்கில் இருந்தபோது" என்றனர். நூற்றுக்கணக்கான மைல்கள், பாருங்கள், எனவே அவர்களுக்கு அந்தப் பயணத்தை மேற்கொள்ள இரண்டு ஆண்டுகள் தேவைப்பட்டன.

102. உங்களுடைய சில உபதேசங்களின் அடிப்படை ஆதாரங்களை நான் அறிவேன், ஆனால் இதுவோ சத்தியமாயிருக்கிறது. அவர்கள் அந்தப் பயணத்தை மேற்கொள்ள இரண்டு ஆண்டுகள் தேவைப்பட்டன. இன்றைக்கு கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளும் இவர்கள் தங்களுடைய முன்னனையில் சிறு குழந்தையை வைத்திருக்க, அதனண்டை வான சாஸ்திரிகள் வருவதைப் போன்று கூறப்படுகின்ற விதமாக அவர்கள் ஒருபோதும் வரவில்லை. அது கிறிஸ்தவனின் அர்த்தமற்ற காரியமாயுள்ளது. அவர்கள் ஒருபோதும் ஒரு முன்னணையில் இருந்த எந்தக் குழந்தையிடமும் ஒருபோதும் வரவில்லை. அவர்கள் அவ்வாறு வந்தனர் என்று கூறுகிற எந்த வேதவாக்கியமும் கிடையாது.

அவர்கள் இரண்டு வயது கொண்ட ஒரு பிள்ளையினிடத்திற்கே வந்தார்கள். அப்பொழுது அவர் எந்த முன்னணையிலுமே இருக்கவில்லை. அவரோ ஒரு வீட்டில் இருந்தார். அதனுடைய ஏனைய வேதவாக்கியங்களை வாசித்துப் பாருங்கள். ஆனால் கிறிஸ்தவ பாரம்பரியங்கள் ஓ, அவர்கள் தங்கள் போதனைகளினால் முழு உலகத்தையும் குழப்பமடையச் செய்துவிட்டனர்.

103. அப்பொழுது அவர் ஒரு சிறு குழந்தையாயிருந்திருந்தால், ஏரோது ஏன் இரண்டு வயது கொண்ட பிள்ளைகளைக் கொன்றான்? வேதவாக்கியமோ அவர்கள் ஒரு "பிள்ளையினிடத்திற்கே", ஒரு குழந்தையினிடத்திற்கு அல்ல, இரண்டு வயதுடைய ஒரு "பிள்ளையண்டைக்கே" வந்தனர் என்று கூறியுள்ளது. ஏரோது அவரைக் கொல்ல முயற்சிக்கவே, இரண்டு வயதுகொண்ட பிள்ளைகளைக் கொல்லப் புறப்பட்டான்; குழந்தையாயிருந்தவர்களை, இரண்டு வயது நிரம்பாதக் குழந்தைகளை அவன் கொன்றிருந்திருக்க மாட்டான்.

104. அவரை ஒரு முன்னணையில் ஒருபோதும் கண்டடையவில்லை; அவர்கள் அவரை ஒரு வீட்டில் கண்டனர். "அவர்கள் அந்த

வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டனர்". ஆனால் எப்படி அவர்கள் அதை திரித்துவிட்டார்கள் என்பதை நீங்களே பாருங்கள்.

105. அதில் வியப்பொன்றுமில்லையே! சில இரவுகளுக்கு முன்னர், இயேசு அந்தப் பரிசேயர்களிடத்தில், "நீங்கள் உங்களுடைய பாரம்பரியங்களைக் கைக்கொண்டு, தேவனுடையக் கட்டளைகளை வியர்த்தமாக்கிவிட்டீர்கள்" என்று கூறினதை நான் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன்.

106. அப்பொழுது அவர்கள், "தேவன் எங்கே?" என்று கூக்குரலிட்டனர். நீங்கள் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்காமலிருக்கும்போது, எப்படி உங்களால் அவரை விசுவாசிக்க முடியும்? எனவே, "அந்த வேதாகமத்தின் தேவன் எங்கே?" என்று கூறுங்கள். அவர் இருக்கிற வழியிலேயே அவரண்டை திரும்பிச் செல்லுங்கள், அப்பொழுது "அந்த ஒரே வழியில் மாத்திரமே நீங்கள் எப்போதும் அவரை அறிந்துகொள்வீர்கள். இதோ அந்த வழி உள்ளது.

107. அவர்கள் வீதிகளில் மேலும் கீழுமாகச் சென்று, "அவர் எங்கே? யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய

நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம்" என்று கூக்குரலிட்டனர்.

108. ஒ, ஆசாரியர்களில் சிலர், "ஐயன்மீர், நீங்கள் எங்கோ உள்ள ஒருகூட்ட மதவெறியர்களுக்கு செவிகொடுத்திருக்க வேண்டும். நீங்கள் யாரோ ஒருவருடைய குறுகிய மனப்பான்மைக்கொண்ட வேத சாஸ்திர போதனைக்கு செவிகொடுத்துக்கொண்டிருக்க வேண்டும்" என்று கூறுவதை என்னால் காண முடிகிறது.

109. அப்பொழுது அந்த மனிதர்களோ, "இல்லையே ஐயா! நாங்கள் அதை செயல்முறையில் கண்டோம். அது உண்மை என்பதை நாங்கள் அறிவோம். அதுவே எங்களை இம்மட்டும் வழிநடத்தினது. ஆனால் எங்களால் அதை இதற்குமேல் கண்டறிய முடியவில்லை, இது இராஜாவினுடைய நகரமாயுள்ளதே" என்று கூற முடிந்திருக்கும்.

110. அது விசித்திரமாயிருக்கவில்லையா? உலகத்தில் உள்ள மிகப்பெரிய சபையில், அதிகமான ஜனங்கள் இருக்க, அதேசமயத்தில் அவர்களோ அதைக் குறித்து ஒன்றையுமே அறிந்திருக்கவில்லை. இந்த கிறிஸ்துமஸிலும் பூமியின்மேல் உள்ள ஜனங்களின் நிலைமை

அதேவிதமாயிருக்கிறதல்லவா? அதே நிலைமையாயிருக்கிறதே! எவரிடத்திலுமே பதில் இல்லாதிருந்தது. அவர்களால் பதிலைக் கண்டறிய முடியவில்லை.

111. முடிவிலே அது மிக மோசமானதே! இவர்கள் ஐஸ்வரியமுள்ள மனிதர்களாயிருந்தனர். அவர்களுடைய ஒட்டகங்களுக்குப் போர்த்தப்பட்டிருந்த நேர்த்தியான ஆடையின் விதத்தை உங்களால் கூற முடியும். அவர்கள் எந்த ஒரு வீதியையுமே விட்டு வைக்கவில்லை; அவர்கள் ஒவ்வொரு சந்திலும் நுழைந்து, "அவர் எங்கே? அவர் எங்கே?" என்று கூச்சலிட்டுக்கொண்டே சென்றனர்.

112. இன்றைக்கு அணு குண்டுகளோ அப்பால் உள்ள கொக்கிகளில் தொங்கிக்கொண்டிருக்க, உலகமானது இன்றைக்கு முழு அழிவின் விளிம்பில் இருக்கும்போது, இந்தத் தலைமுறை மக்களோ ஒரு வினாடியில் அழிக்கப்படவிருக்கின்றனர்; ஓர் அழிவின் தகர்வுறுதலினால் எந்த சிறிய தேசமும் பூமியை புதையுண்டு மறையச் செய்ய முடியும்.

113. அன்றொரு நாள் நடைபெற்ற விஞ்ஞானிகளின் கூட்டத்தில், ஓர் இருள் சூழ்ந்திருந்ததாக அவர்கள் கூறினர். ஏன்,

இப்பொழுது அவர்கள் வைத்துள்ள அணுகுண்டோ ஒரு கைத்துப்பாக்கியின் மேற்பகுதியளவாய் மட்டுமே உள்ளது. மற்ற தேசங்களும் அதை வைத்துள்ளன. பென்டகன் தாங்கள் வைத்துள்ளதை எப்போதாவது எறியுமானால், அங்கே எந்தக் கிறிஸ்துமஸ் ஆவியும் விடப்பட்டிருக்காது, ஜனங்களோ திகிலடைந்து வீதிகளில் ஓடி சத்தமிட்டு கதறிக் கொண்டிருப்பார்கள். உங்களால் எங்கும் மறைந்து கொள்ளவே முடியாது. மறைந்து கொள்வதற்கான வழியேக் கிடையாது.

114. முடிவோ இப்பொழுதே உள்ளது. நாம் முடிவிலே இருக்கிறோம், அடையாளங்களும், அதிசயங்களும் தோன்றுகின்றன, மேசியாவோ தம்மைத்தாமே ஆவியில் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

115. அந்த ஆவியினால் அவர் காலத்தினூடாகத் தம்மை அதிக அதிகமாக வெளிப்படுத்திக்கொண்டே வந்து முடிவிலே அந்தப் பரிபூரண மனிதருக்குள்ளாகப் பிறந்தார்.

116. இப்பொழுது மெத்தோடிஸ்டு காலங்களினூடாக, பாப்டிஸ்டு, பிரஸ்பிடேரியன், பெந்தேகோஸ்தேயினூடாக முடிவிற்கு வந்து, இப்பொழுது பரிபூரணமான ஒருவர் ஒரு சரீரத்தில் திரும்பி வருகிறதற்கு முன்னர் இதோ அது

வெளிப்படுத்தப்படுகிறது; அவருடைய சபையை ஒன்றுசேர்க்க வெளியிலிருந்து இழுத்து, அவர்களை ஒவ்வொரு ஸ்தாபனத்திலிருந்தும் வெளியேக் கொண்டு வருகிறார். அவர்களை அவரண்டைக் கொண்டு வருகிறார், ஏனென்றால், அவர் சீக்கிரத்தில் பிரசன்னமாவார். சபைகளோ அதற்கான பதிலைப் பெற்றிருக்கவில்லை.

117. ஆகையால் காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதினால் சனகெரீம் சங்கத்திற்குள் அழைக்கப்பட, சங்கங்கள் ஒன்று கூடின. அப்பொழுது அவர்களிடத்தில் “வேதவாக்கியங்களைப் படித்துப் பாருங்கள். இந்த மேசியா எங்கே பிறக்க வேண்டியவராயிருக்கிறார்?” என்று ராஜா கேட்டான்.

118. விநோதமான காரியம் என்னவென்றால், அவர்கள் அவரை வேதவாக்கியத்தில் எங்கே கண்டனர் என்று உங்களுக்குத் தெரியுமா? மீகா தீர்க்கதரிசனத்தில் கண்டறிந்தனர். “யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதேயாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; நீ உருளும் பரிசுத்தராயிருக்கவில்லையா? நீ அவைகள் எல்லாவற்றிலும் சிறியதல்லவா? ஆனால் என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு

உன்னிடத்திலிருந்து புறப்படுவார்". அங்கேதான் அவர்கள் அதனைக் கண்டறிந்தனர்.

119. ஆகையால் அந்த வான சாஸ்திரிகள், அவர்கள் அதைக் கேட்டபோது, அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு வாசலைவிட்டு வெளியேறினர். அவர்கள் அந்தப் பழைய, குளிர்ந்துபோன, பின்வாங்கிப்போன, சம்பிரதாயமான ஸ்தலத்தை விட்டு வெளியேறினவுடனே, மீண்டும் அந்த நட்சத்திரம் அங்கே தொங்கினது. அப்பொழுது அந்த நட்சத்திரம் அங்கே இருந்தது. எனவே வேதமோ, "அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்டபோது, மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்" என்று கூறியுள்ளது. ஓ, அவர்கள் அதைக் கண்டபோது, அவர்கள் சற்று சத்தமிட்டனர் என்றே நான் கூறலாம். அதாவது அவர்கள் கண்டிருந்த ஆசீர்வாதமான அந்த இயற்கைக்கு மேம்பட்ட அந்த நட்சத்திரம், இவர்கள் அவர்களுடையப் பண்டைய, குளிர்ந்துபோன, சம்பிரதாய முறைகளிலிருந்து வெளிவந்தவுடனே, அது மீண்டும் பிரசன்னமானது. அது அங்கே இருந்தது.

120. எனவே அது அவர்களை பெத்லகேமிற்கு வழிநடத்திச் சென்றது, அவர்கள் அங்கே அந்த ஒருவரை, இம்மானுவேலாய் இருந்த

அவரை, ஒரு தச்சனுடையப் பட்டறையில் எழையாய் வளர்க்கப்பட்டுக்கொண்டிருந்த ஒருவரைக் கண்டனர். சாஸ்திரிகள் வைத்திருந்த எல்லாவற்றையும் இறக்கி, அவைகளை அவருடைய பாதத்தண்டையில் வைத்தனர். அப்பொழுது அவர்கள் அவரைத் தொழுது கொண்டனர், ஏனென்றால் அவர் ஒளியாக வந்திருந்தையும், உலகத்தின் இரட்சகராகப் பிறந்திருந்ததையும் அவர்கள் அறிந்திருந்தனர். எனவே அவர்கள் வைத்திருந்த எல்லாவற்றையும் அளித்துவிட்டனர், அவர்கள் அளித்தனர், ஏனென்றால் தேவன் அவரை அளித்திருந்தாரே!

121. நண்பனே, "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ", மெத்தோடிஸ்டாகவோ, பாப்டிஸ்டாகவோ, பிரஸ்பிடேரியனாகவோ, மத நம்பிக்கையற்றவனாகவோ, நீங்கள் என்னவாயிருந்தாலும், "அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி," அது உங்களுக்காகவும் எனக்காகவுமே, "இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." நீங்கள் எதைத் தேடிக்கொண்டிருக்கிறீர்கள். ஜீவனைப் பெற்றுக் கொள்ளுங்கள்!

★★★★★

# செய்தி: கடைசி காலத்திற்கென்று தேவனால் அருளப்பட்ட வழியை ஏற்றுக் கொள்ளுதல்,

63-01-15

236. இந்தியாவில் இருந்து பாபிலோனுக்கு வந்த அந்த சாஸ்திர்கள், ஏதோ ஒன்று சம்பவிக்கப் போகிறது என்று அவர்கள் அறிந்திருந்தனர். அந்த ராஜா பிறந்திருக்கிறார் என்று அவர்கள் அறிந்திருந்தனர். அவர்களுக்கு ஒரு திசைக்காட்டும் கருவி தேவைப்பட்டது. தேவனோ அந்த ராஜாவிடம் அவர்களை வழி நடத்த ஒரு நட்சத்திரத்தை அவர்களுக்கு அளித்தார். பாருங்கள்? அவர்கள் தேவனால் அருளப்பட்ட வழியில் சென்றனர். அவர்களில் ஒருவன் “ஹே பெல்தாசார், நீ ஒரு பெரிய மனிதனல்லவா, நீ உன் திசை காட்டும் கருவியைக் கொண்டு வந்தாயா?” என்று கூறியிருப்பான் என்று நான் சற்று கற்பனை செய்து பார்க்கிறேன்.

அதற்கு அவன், “இல்லையே” என்றான். அப்படியானால், எப்படி அந்த இடத்தை சென்றடையப்போகின்றாய். “நான் தேவனால்

அருளப்பட்ட வழியில் செல்லப் போகிறேன்." அது தான் வழியாகும்.

எப்படி அந்த இடத்தை சென்றடையப் போகின்றாய்? "தேவனால் அருளப்பட்டுள்ள வழியின்படியே செல்லப் போகிறேன்." "அது என்னவாயிருக்கிறது?"

237. "அதோ அந்த நட்சத்திரம். அது தான். அது தான் தேவன் எங்களுக்கென்று அளித்திருக்கும் வழியாகும்." அவர்களுக்கு ஒரு திசைகாட்டும் கருவி தேவைப்பட்டது. தேவன் அவர்களுக்கு ஒரு நட்சத்திரத்தை அளித்தார்.

★★★★★

# செய்தி: நாங்கள் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்து கொள்ள வந்திருக்கிறோம்

18 இப்பொழுது, இன்றிரவு நாம் இதை ஒரு வித்தியாசமான வழியிலிருந்து அணுகப் போகிறோம். கர்த்தருக்குச் சித்தமானால், நான் இன்றிரவு, "நாங்கள் அவருடைய நட்சத்திரத்தைக்

கண்டு அவரைப் பணிந்து கொள்ள வந்திருக்கிறோம்" என்றே என்னுடைய பாடப் பொருளைத் தெரிந்து கொள்ளப் போகிறேன்.

19 இந்த சாஸ்திரிகள். நாம் இந்தவிதமான கருத்தினை உடையவர்களாயிருக்கிறோம். மூன்று சாஸ்திரிகள் இருந்தனர் என்று பாரம்பரியத்தினால் நமக்கு கூறப்பட்டுள்ளது, அதே சமயத்தில் அது உண்மையா என்று நாம் அறியோம். வேதம், "மூன்று" பேர் இருந்தனர் என்று கூறவில்லை. அவர்கள் புறப்பட்டு வந்த இடமாகிய இந்தியாவில் ஊழியம் செய்யும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்தது, அவர்களோ முவராகவே பயணிக்கின்றனர். நாமோ இன்னமும் அவர்களை அவ்வாறேக் காண்கிறோம். நான் அண்மையில் இந்தியாவில் இருந்தேன். அவர்கள் தலைப்பாகையை அணிந்து, ஒருவருடைய தலை மற்றவரின் தலையோடு முட்டினாற்போல் சம்மணமிட்டு, பகல் நேரத்தில் வீதியில் அமர்ந்து, ஒரு பகற்கனவு காண்பது போல் அமர்ந்திருப்பர். அவர்கள் நேராக உட்காரமாட்டார்கள், அவர்கள் சம்மணமிட்டு அமருவர். அவர்கள் மூன்று பேராகவே பயணம் செய்கின்றபடியால் மூன்று சாஸ்திரிகள் இருந்தனர் என்பதை நாம் நம்புகிறோம் என்று நான் நினைக்கிறேன்.

20 அவர்கள், "கிழக்கில் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்து கொள்ள வந்திருக்கிறோம்" என்று கூறினர். வேறு வார்த்தைகளில் கூறினால், "இந்த காலத்திற்கான அவருடைய அடையாளத்தை நாங்கள் கண்டிருக்கிறோம்" என்பதாகும், அதாவது அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த காலம். அது அவ்வண்ணமாக தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருந்தது.

★★★★★

## செய்தி: 63-12-16 நாங்கள் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்து கொள்ள வந்திருக்கிறோம்

169 இங்கேயோ சாஸ்திரிகள் தங்களுடைய பரலோக வெளிச்சத்தை கவனித்துக்கொண்டே பயணித்து வந்து, "நான் எருசலேமை அடையும்போது, நமக்கு மேலே இருந்து நம்மை வழி நடத்திக் கொண்டிருக்கிற இந்த பரலோக இரகசியமான தெய்வீக ஒளி என்ன என்பதை அவர்கள் எனக்குச் சொல்லுவார்கள்" என்று

கூறிக்கொண்டனர். அவர்கள் தெருக்களில் இங்கும் அங்கும் சென்று, "அவர் எங்கே? யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? நாங்கள் அவருடைய நட்சத்திரத்தைக் கிழக்கில் கண்டோம். எனவே நாங்கள் அவரைத் தொழுது கொள்ள வந்திருக்கிறோம். நாங்கள் பொன்னையும், தூபவர்க்கத்தையும் வைத்துள்ளோம், நாங்கள் எல்லாவற்றையும் அவருக்காக வைத்துள்ளோம். அவர் எங்கே? அவர் எங்கே?

170 அவர்கள், "யாரை எங்கே என்று கேட்கிறீர்கள்? என்ன?" என்றனர். அது அந்தவிதமாகவே இன்றைக்கும் உள்ளது. அவர்கள், அதைப் போன்ற ஒரு காரியம் இன்றைக்கு சம்பவிக்கவில்லையே" என்று கூறினர். சூரியன் அஸ்தமித்தபோது, நாங்கள் ஒரு இரகசியமான தெய்வீக ஒளியினைக் கண்டோம்." "நான் அதை ஒருபோதும் கண்டதில்லையே." "கோபுரத்தின் மேலுள்ள ஜாமக்காரனைக் கூப்பிடுங்கள்." "நீ அந்தவிதமான ஒரு இரகசியமான் ஒளியைக் கண்டாயா?" "நீங்கள் என்னக் கூறுகிறீர்கள்?" "நீ ஏதாவது இரகசியமான தெய்வீக ஒளியினைப்... பார்த்தாயா?"

171 “இல்லையே! உங்களுக்கு என்ன நேர்ந்தது?” பாருங்கள், அவர்கள் அதற்கான பதிலை உடையவர்களாயிருக்கவில்லை.

172 இன்றைக்கு அவர்கள் அதைப் பெற்றிருக்கவில்லையே! இந்தக் காரியங்கள் என்ன என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை, அவர்கள் அங்கு அதை அறிந்திருக்க வேண்டும், அங்கிருந்த பெரிய சபைகளின் தலைவர்கள் இந்தக் காரியங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படிக்கு அவைகளை அறிந்திருக்க வேண்டும். ஆனால் தேவன் எப்பொழுதுமே சிறுபான்மையினரிடமே கிரியை செய்கிறார், அது மிகவும் எளிமையாயிருப்பதால், அது அவர்களுக்கு மேலாக கடந்து சென்று விடுகிறது. அவர்களோ அதை அறிந்து கொள்வதில்லை. ஆனால் அதே சமயத்தில் அவர் தம்முடைய வார்த்தையை அதைப் போன்றே நிறைவேற்றுகிறார். அதுதான். நாம் இந்தப் பெரிய காரியங்களில் சிக்கிக்கொண்டிருக்கிறபடியால், நம்மால் அசைய முடியவில்லை. (தேவனே நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற வேளையைக் காணும்படிக்கு எங்களை அந்தக் காரியங்களிலிருந்து கட்டவிழ்த்து விடுவித்தருளும்) தேவன் ஒரு சொப்பனத்தின் மூலமாக மீண்டும்

கிரியை செய்ய வேண்டுமானால், அவரால் இதை உங்களுக்கு வெளிப்படுத்த முடியும். நிச்சயமாகவே, அவரால் முடியும். நாம் கடைசி நாட்களில் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது கவனியுங்கள்.

173 அவர்கள் அந்த மர்ம ஒளியைக் குறித்த பதிலை உடையவர்களாயிருக்கவில்லை, அவர்கள் தலைமை அலுவலகத்திலும் அதற்கு பதிலைப் பெற்றிருக்கவில்லை. அவர்கள் இன்றைக்கும் பதிலை உடையவர்களாயிருக்கவில்லை. ஆகையால் அவர்கள் என்ன செய்தனர்? அவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கொண்டுவரும்படிக் கூறினர். அதுவே ஆலோசனையாயிருந்தது. எனவே அவர்கள், "நாம் தேவனுடைய வார்த்தையில் நோக்கிப் பார்த்து, இந்தக் காரியங்கள் எங்கேயிருக்கின்றன என்பதைக் கண்டறிவோமாக," என்றுக் கூறினர். அவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு வரும்படிக் கூறினபோது, இன்றுள்ள அநேக ஜனங்களைக் காட்டிலும் சாஸ்திரிகள் புத்திசாலிகளாயிருந்தனர். எனவே அவர்கள் அதற்கான பதிலைப் பெற்றிருக்கவில்லையென்றும், அதைப் பெற்றுக் கொள்ளப் போவதில்லையென்றும் சாஸ்திரிகள் தேவனுடைய வார்த்தையின்படி கண்டு

கொண்டனர். ஆமென். அது அந்தப் பட்டணத்தில் இருக்கவில்லையென்றும், அது அந்த இடமாயும் கூட இருக்கவில்லையென்றும் அவர்கள் கண்டு கொண்டனர். அவர் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் பிறக்க வேண்டியதாயிருந்தது. ஆமென். அதுவே மிகச் சிறியதாயும், அவை எல்லாவற்றைப் பார்க்கிலும் மிகத் தாழ்வானதாயும், மிகச் சிறிய இடமாயும் இருக்க வேண்டுமே தவிர, தன்னைப் பெரிதாக பாவித்துக்கொள்ளும் இடமல்ல. சாஸ்திரிகளோ அதை துரிதமாகவே கண்டு கொண்டனர். அவர்கள் அதற்கான பதிலைப் பெற்றிருக்கவில்லையென்றும், அதைப் பெற்றுக்கொள்ளப் போவதில்லையென்றும் தேவனுடைய வார்த்தை வெளிப்படுத்தினது. எனவே அவர்கள் அந்த குழப்பத்திலிருந்து வெளியேறினர். ஆகையால், அவர்கள் அதை விட்டுச் சென்றனர். அல்லேலூயா, அவர்களுக்காக அவர்கள் அதைவிட்டுச் சென்றனர்.

174 அவர்கள் அந்தக் குழப்பத்தைவிட்டு வெளியேறினவுடனே, இயற்கைக்கு மேம்பட்டது மீண்டும் தோன்றினது. அங்குதான் காரியமே உள்ளது. அவர்கள் அந்தக் காரியங்களிலிருந்து விடுவித்துக்கொண்டப் பிறகே அவ்வாறு தோன்றினது. அவர்கள் அங்கிருந்த அந்த கதம்ப கூளத்தைவிட்டு வெளியேறின பிறகே, அந்த

பெரிய தலைமை அலுவலகம் இருந்த இடத்தில் வீண் சந்தடியும், வாக்குவாதமும் இருந்தது. எல்லா பெரிய பிரதான ஆசாரியர்களும், தெய்வீக பாண்டித்தியம் பெற்றவர்களும், எல்லோரும் தங்களுடைய தத்துவப் படிப்பு பட்டங்களோடும், தங்களுடைய மகத்தான, பெரிய உயரமான தலைப்பாகையுடன் சுற்றி நடந்துகொண்டிருந்தனர். அவர்களால் அதற்கான நட்சத்திரத்தைப் பார்த்திருக்க முடியாது. அந்தவிதமாக நடந்து கொண்டிருந்தனர். அப்படிப்பட்டக் காரியங்கள் ஏராளமாக ஜனங்களை குருடாக்குகிறது, பெரிய பெயர்கள்; பெரிய மனிதர்களாய் நடந்து கொண்டிருத்தல் போன்றவையேயாகும்.

175 அவர்களில் அநேகர், "அதைப் போன்ற ஒரு காரியமேக் கிடையாது. நானூறு வருடங்களாக, நாங்கள் அப்படிப்பட்ட ஒரு காரியத்தையும் கேள்விப்பட்டதேயில்லை. இந்த பைத்தியக்கார ஜனங்களோடு உள்ள காரியம் தான் என்ன? எனவே அவர்களுக்கு சொந்தமான இந்தியாவிற்கே அவர்களை திருப்பி அனுப்பிவிடுங்கள்" என்றனர்.

176 "என்ன? தேவனுடைய வார்த்தை, அதைக் குறித்து என்ன? அவர், "யூதேயாவிலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல;

என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார். ஆனால் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு...” கூறியுள்ளாரே. அப்பொழுது அவர்களோ, “ஓ, நாங்கள் தவறான இடத்தில் இருக்கிறோம்” என்றனர். “நாங்கள் இந்தவிதமான எந்த காரியத்துடன் சேரமாட்டோம்.”

177 ஆகையால், அவர்கள் தங்களுடைய ஒட்டகங்களைத் திருப்பிக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டனர். தேவன் அவர்களை ஆசீர்வதிப்பாராக. அங்கிருந்து அவர்கள் புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் அங்கிருந்து வெளியேறினவுடனே, அந்த ஒளி மீண்டும் தோன்றிற்று. இயற்கைக்கு மேம்பட்டது மறுபடியும் அவர்களிடத்தில் அசையத் துவங்கினது. ஓ, என்னே! சாஸ்திரிகள் அவர்களுடைய முறைமைகளிலிருந்து வெளியேறினவுடனே, அப்பொழுது அவர்கள் இயற்கைக்கு மேம்பட்டதைப் பின்தொடரத் துவங்கினர். ஆகையால் அவர்கள் அதிலிருந்து வெளியேறினவுடனே, பரலோகத்திலிருந்து இயற்கைக்கு மேம்பட்ட ஒளி அவர்களுக்கு மீண்டும் தோன்றினது.

178 இந்தக் காரியங்களை விசுவாசிக்காத அவிசுவாசிகளின் கூட்டத்தில் நீங்கள்

கட்டப்பட்டிருக்கும் வரை, உங்களால் ஒருபோதும் காணவே முடியாது. நீங்கள் வெளவாலைப்போல குருடாயிருப்பீர்கள். அப்படிப்பட்ட எல்லாக் காரியத்திலிருந்தும் உங்களை துண்டித்துக் கொள்ளுங்கள்; அது தாயாயிருந்தாலும், தகப்பனாயிருந்தாலும், சகோதரியாயிருந்தாலும், ஸ்தாபனமாயிருந்தாலும் அல்லது அது வேறு என்னவாயிருந்தாலும் சரி. "தன்னைத்தான் வெறுத்து என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல. கலப்பையின் மேல் கையை வைத்து பின்னிட்டுப் பார்க்கிற எவனும் உழவுக்குப் பாத்திரனல்ல." சகோதரனே, சகோதரியே, நான் இதை உங்களுக்குக் கூறட்டும், ஒரு அசலான, உண்மையான கிறிஸ்தவ வெளிச்சம் இன்றிரவு பிரகாசித்துக் கொண்டிருக்கிறது, அது இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்பதேயாகும். எல்லாவற்றிலிருந்தும் துண்டித்துக் கொள்ளுங்கள். அவர் வார்த்தையாயிருக்கிறார். அவர் எப்பொழுதுமே வார்த்தையாயிருக்கிறார். தேவனுடைய வார்த்தை பரிபூரணமானதாயுள்ளது. அது சுயதோற்றமான பொருளையுடையதாயிராது. நீங்களோ, "அது இதைப் பொருட்படுத்துகிறது" என்று கூறுகிறீர்கள்.

179 அது என்ன கூறுகிறதோ அதுதான் அதன் அர்த்தம். வேதம், "அது சுயதோற்றமான பொருளையுடையதாயிராது" என்று கூறியுள்ளது. அது கூறுகிறதென்றால், அது "கருப்பை கருப்பென்றும், வெள்ளையை வெள்ளையென்றும்" கூறினால், அது தான் அது. அதுவே முடிவானதாயுள்ளது. அதுவே முற்றிலுமானதாயுள்ளது. தேவனுடைய ஆவியினால் பிறந்த ஒவ்வொரு மனிதனும் அதற்கு கட்டப்பட்டிருக்கிறான், என்ன நேர்ந்தாலும், அதிலிருந்து ஒன்றுமே அவனைப் பிரிக்க முடியாது. அவன் அந்த வார்த்தைக்கு இணைக்கப்பட்டிருக்கிறான், ஏனென்றால் அது கிறிஸ்துவாயுள்ளது. கிறிஸ்து வார்த்தையாயிருக்கிறார். கிறிஸ்துவினால் தம்முடைய வார்த்தையைக் குறித்து பொய்யுரைக்க முடியாது, ஏனென்றால் அவர் வார்த்தையாயிருக்கிறார். நீங்களோ, "நல்லது, அவர் அதைக் கூறினார் என்று எனக்குத் தெரியும், ஆனால்!" என்று கூறுகிறீர்கள்.

180 அதற்கு ஆனால் என்ற எதுவுமே கிடையாது, அதைக் குறித்து அதுபோன்றதே கிடையாது. அவர் அந்த விதமாக அதை உரைத்திருந்தால், அதுதான் அது. அவரால் அதை

மாற்ற முடியாது. அவரால் முடியாது. அவர் மாறதவராயிருக்கிறார். அவர், "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை, ஒரு போதும் தவறுவதில்லை" என்றார். அது அதனுடைய காலத்தில் அங்கிருக்கும். அதைப் பிரகாசிக்கச் செய்ய யாராகிலும் ஒருவர் அங்கிருப்பார். அது உண்மை.

181 இந்த குமாரன் அங்கிருப்பார் என்ற அந்த வார்த்தையை தேவன் உரைத்தார், அவரே அதைப் பிரகாசிக்கச் செய்ய அங்கிருந்தார். அது பரலோகத்திலிருந்து வருகை புரிந்த நட்சத்திரமாயிருந்தது; அவர்களோ அதைக் கவனித்துக் கொண்டிருந்து, அதண்டைக்கு நேராக வந்தார்கள். எனவே அவர்கள் அந்த பழைய கோட்பாட்டை விட்டுவிட்டு, மீண்டும் இயற்கைக்கு மேம்பட்டதைப் பின் தொடரத் துவங்கினர், அதைவிட்டு விலகிச் சென்றுவிட்டனர். அவர்கள் எவ்வளவாய்க் களிகூர்ந்தனர்! வேதம், "அவர்கள் மீண்டும் அந்த ஒளி தோன்றினதைக் கண்டபோது, ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்" என்று கூறியுள்ளது.

★★★★★

# செய்தி: தேவனுடைய வெகுமதிகள் எப்பொழுதுமே அவைகளுடைய ஸ்தானங்களைக் கண்டடைகின்றன

63-12-22

48. இப்பொழுது கவனியுங்கள், தேவன் ........ அது பாபிலோனாயிருந்தது, அது இந்தியாவாயிருந்தது ........ கிழக்கிலிருந்து வந்து கொண்டிருந்த ......... மகத்தான மனிதனை, கற்றறிந்த மனிதன், வான சாஸ்திரியை, அந்தத் தெரிந்துக் கொள்ளப்பட்ட மனிதரை கண்டறியும்படியாயிருப்பதென்பது, இன்றிரவு அது என்னே ஒரு வினோதமானக் காரியமாயிருக்கிறது. அவர்கள் ஒருபோதும் ஒரே இரவில் முழுவதுமாய் வரவில்லை, ஓர் இரவு புறப்பட்டு அடுத்த இரவு அங்கு வந்தடைந்துவிடவில்லை. அவர்கள் ஏறக்குறைய இரண்டு வருடங்களாக அங்கே வந்துகொண்டிருந்தனர். அவர்கள் ஒருபோதும் ஒரு முன்னணையில் இருந்த ஒரு சிறு குழந்தையினிடத்திற்கு வரவில்லை. அவர்கள் ஒரு பிள்ளையினண்டைக்கு, ஒரு பிள்ளையினண்டைக்கு வந்தனர். எனவே ஏரோது

இரண்டு வயதுக்குட்பட்ட பிள்ளைகளையே கொன்று போட்டான். பாருங்கள், அது ஒரு சிறு குழந்தையாய் ஒரு தொட்டிலில் படுத்துக்கிடக்கவில்லையென்பதை அறிந்திருந்தான். அப்படியிருந்திருந்தால் அவன் எல்லாக் குழந்தைகளையும் கொன்று போட்டிருப்பான். ஆனால் அவன் இரண்டு வயதிற்குட்பட்டிருந்தப் பிள்ளைகளைக் கொன்றால் அவரையும் நிச்சயமாக கொன்றுவிடலாம் என்றே அந்த வயதுடையப் பிள்ளைகளைக் கொன்று போட்டான். அவன் அவர்கள் எல்லோரையும், மிக அதிகமானோரைக் கொல்ல விரும்பாததை அறிந்திருந்த காரணத்தால், அவன் அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குட்பட்டதைக் குறித்தான். அவன் அப்படியே .......... ஏனென்றால் அவர்களில் அதிகமானோர் அவனுக்கு அடிமைகளைப் போன்றிருந்தனர். அவன் நிச்சயமாக அவரை அடைய ....... கொல்ல விரும்பினான். எனவே அவன், “பிள்ளையோ ஏறக்குறைய இரண்டு வயதுடையதாயிருக்கும். ஆகையால் இரண்டு வயதிற்குட்பட்ட ஒவ்வொன்றையும் கொன்றுபோடுங்கள்” என்றான். புரிகின்றதா?

அது, “புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமவிலே

கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, அவைகள் இல்லாதபடியால் ஆறுதலடையாதிருக்கிறாள்" என்று தீர்க்கதரிசி உரைத்தது நிறைவேற்றப்பட்டது.

49. இப்பொழுது இந்த சாஸ்திரிகள், மகத்தான மனிதர்கள் பாபிலோனில் இருந்ததையும், அவர்கள் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டதையும், "நாங்கள் கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம்" என்று அவர்கள் கூறினதை நீங்கள் கவனித்தீர்களா? அவர்கள் கிழக்கிலிருந்து வந்து, அவர்கள் அங்கே நட்சத்திரத்தைக் கண்டு மேற்கே சென்றனர். ஏனென்றால், இந்தியா மேற்கிலுள்ளது, பாபிலோ ........ பாலஸ்தீனாவின் ........ வடமேற்கு, அவர்கள் டைகிரீஸ் நதியினூடாக வந்து, அந்தச் சமவெளிகளைக் கடந்து, பெத்லகேமிற்கு வந்து அங்கே அவர்கள் அந்தப் பிள்ளையைக் கண்டனர். யோசேப்பும் மற்றவர்களும் அங்கிருந்து புறப்பட்டுச் செல்லவேயில்லை என்பது நினைவிருக்கட்டும். அவர்கள் நேராக நாசரேத் திற்குச் சென்று அங்கேயேப் பிள்ளையை வளர்த்திருந்தனர்.

50. இப்பொழுது, அவர்கள் ........ அளித்தனர் என்று நாம் இங்கே காண்கிறோம் .... இந்த மனிதர்,

வான சாஸ்திரிகளாயிருந்து கொண்டு, நட்சத்திரங்களையே ஆராய்ச்சி செய்து கொண்டு, இந்த இரகசியமான வான மண்டல ஒளிகள் அங்கே மேலே பிரசன்னமானதைக் கண்டு, ஏதோ காரியம் சம்பவிக்கப்போவதாயிருந்தது என்பதையும், அதாவது மேசியா, வானங்களையும், பூமியையும் ஆளுகை செய்பவர் பிறக்க வேண்டியவராயிருந்தார் என்பதையும் அவர்கள் அறிந்து கொண்டனர். அவர்கள் தெய்வீகத்தன்மை ஒரு வீட்டிற்குள், ஒரு மானிட சரீரத்திற்குள் அடைத்து வைக்கப்படும் என்பதனை அறிந்து வந்திருந்தனர். ஏனென்றால், அவர்களுடைய சாட்சியை உங்களுக்கு காண்பிக்கும்படியாக ....... உங்களுடைய ஜீவியமானது உங்களுடைய வார்த்தைகளைக் காட்டிலும், நீங்கள் என்ன கூறுகிறீர்கள் என்பதையே பொருட்படுத்தாத அளவிற்கு சத்தமிடுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் என்னவாயிருக்கிறீர்கள் என்பதனைக் கொண்டே நீங்கள் யாராயிருக்கிறீர்கள் என்பதை ஜனங்கள் அறிந்துகொள்ளுகிறார்கள்.

51. இந்த ஜனங்களை, இந்த வானசாஸ்திரிகளைக் கவனியுங்கள். அவர்கள் அவருக்கு ... கொண்டு வந்தனர். அவர்கள் அவருக்குக் கொண்டுவந்த வெகுமதிகள், அவர்கள்

அவர் என்னவாயிருந்தார் என்று எண்ணியிருந்தனர் என்பதை அடையாளங்காட்டின. அவர்கள் அவருக்குப் பொன்னையும் தூபவர்க்கத்தையும் மற்றும் வெள்ளைப்போளத்தையும் கொண்டு வந்தனர். இப்பொழுது இந்த அடையாளங்கள் என்ன என்பதைக் கவனியுங்கள். அதாவது நான் இப்பொழுது உங்களிடத்தில் ........ இந்த அடையாளங்கள் எதைப் பொருட்படுத்துகின்றன என்பதைக் குறித்துப் பேச விரும்புகிறேன். இப்பொழுது, நான் இங்கே சில வேத வசனங்களை எழுதி வைத்திருக்கிறேன், கர்த்தருக்குச் சித்தமானால், நாம் அதனை ஒரு நிமிடம் சற்று வாசிப்போம்.

இப்பொழுது: பொன், தூபவர்க்கம், வெள்ளைப்போளம்

52. இப்பொழுது: வேதாகமத்தில் பொன் ........ அது எப்படியாய் கிறிஸ்துவுக்குப் பொருந்துகிறது, ஏனென்றால் பொன் தெய்வீகத்தைக் குறித்துப் பேசுகிறது. பொன் தெய்வீகமாயிருக்கிறது. நாம் இன்னும் ஒரு நிமிடத்தில் அதற்குச் செல்வோம். தூபவர்க்கம் “சேவையைக்” குறித்துப் பேசுகிறது. வெள்ளைப் போளம் “மரணமாயிருக்கிறது.” தேவன், தெய்வீகம், மரிக்கும்படியான சேவையில்.

அந்த விதமாகத்தான் அவர் இருந்தார். அவர்கள் கொண்டுவந்த அந்தக் காரியமே அவர் என்னவாயிருந்தார் என்று அவர்கள் எண்ணியிருந்தனர் என்பதை அடையாளங்காட்டின.

53. இன்றைக்கு, "நாம் அவரண்டைக் கொண்டு வருகிற காரியங்கள் அவரைக் குறித்த நம்முடைய சிந்தனைகள் என்ன வாயிருக்கின்றன என்பதையே அடையாளங்காட்டுகின்றன" என்று நான் அதை நமக்கே கூறுகிறேன். நான் என்ன பொருட்படுத்திக் கூறுகிறேன் என்று நீங்கள் புரிந்து கொள்கின்றீர்களா? புரிகிறதா? நீங்கள் ஒரு ........ நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடு அதை விசுவாசித்தால், அதனுடைய ஒவ்வொரு வார்த்தையையும் விசுவாசித்தால், நீங்கள் கொண்டுள்ள எல்லாவற்றையும் அதற்கு கொடுப்பதன் மூலம் நீங்கள் அதை அடையாளங்கண்டு கொள் வீர்கள். புரிகின்றதா? ஆனால் இது சிறந்த ஜனங்களோடு சபையைச் சுற்றிலும், அதைப்போன்ற காரியங்களோடு இணைந்திருக் கும்படியான ஒரு நல்ல ஸ்தலமாக இருக்கிறது என்று நீங்கள் விசுவாசித்தால், நீங்கள் எதை அளிக்கிறீர்கள் என்பதைப் பொருத்த தாய் அது உள்ளது. (வெறுமையான சபையில் உள்ள

சிலரோடு ஒரு சில தோழமையான நேரங்கள் அல்லது அதைப் போன்ற ஒரு காரியம்). ஆனால் நீங்கள் - நீங்கள் அதை உண்மையாகவே உங்கள் முழு இருதயத்தோடு விசுவாசித்தால், அப்பொழுது நீங்கள் உங்களுக் குள்ளே ஒவ்வொன்றையும் அதற்கு அளிப்பீர்கள், புரிகின்றதா? அது நீங்கள் உண்மையாகவே செய்தியை விசுவாசிக்கிறீர்கள் என்றும், நீங்கள் அது சத்தியமாயிருக்க வேண்டும் என்று விசுவாசிக்கிறீர்கள் என்றும் உங்களை அடையாளங்காட்டுகிறது.

54. அனேக ஜனங்கள், இந்த அளவிற்குத்தான் என்னால் விசுவாசிக்க முடிகிறது. என்னால் அவ்வண்ணமேதான் விசுவாசிக்க முடிகிறது என்கிறார்கள். சீஷர்கள் ...... நான் கடைசி முறையாக இங்கே அதன் பேரில் நான் பேசினேன் என்று நான் நினைக்கிறேன்; அதாவது விசுவாசிகள், பாவனை - விசுவாசிகள், அவிசுவாசிகள், அதுவாகத்தான் அது இருந்ததல்லவா? நான் ......... அதன் பேரில் இங்கே பேசினேன் அல்லவா? புரிகின்றதா? ஒவ்வொரு நபரைப் பற்றியும், அவர்களுடைய வகை என்னவாயிருக்கிறது என்பதைப் பற்றியுமேயாகும். பாருங்கள், அதுவோ அவர்களால் அதைக் குறித்து அந்த அளவிற்குத் தான் ஏற்றுக்கொள்ள முடிகிறது. மீதமுள்ளதையோ

ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்ற ஒரு நிலைக்கு வருவதாயிருக்கும்.

55. இப்பொழுது, இந்த வெகுமதிகள் பூமியின் மேல் கிறிஸ்துவினுடைய பயணத்திற்கும், பூமியின் மேல் இங்கே பிறந்த ஒரு குழந்தைக்கும் எப்படியாய் பொருந்திக்கொண்டிருந்தன. வான சாஸ்திரிகள் அவருக்குக் கொண்டு வந்த இந்த வெகுமதிகள் தேவனிடத்திலிருந்து வந்த அவருடைய கட்டளைக்கும், பூமியின் மீதில் அவருடைய பயணத்திறகும் எப்படியாய் சரியாக அப்படியே பொருந்தின.

★★★★★

# செய்தி: அது ஏன் மேய்ப்பர்களாக இருக்க வேண்டியதாயிருந்தது?

42 கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகளும்கூட, அவர்கள் இருந்த பாபிலோனிலிருந்து தென்மேற்கு திசையில் நோக்கினபோது அவர்கள் கம்பீரமான ஒரு நட்சத்திரத்தைக் கண்டனர். உங்களுக்குத் தெரியுமா, எந்த வான்நிலை ஆராய்ச்சி நிலையமும் அதைக் கண்டதாக வரலாறு எதும் இல்லை. (அங்கே அவர்கள் நட்சத்திரத்தின் மூலம்

நேரத்தைக் கணித்தனர், அங்கு மேதைகள் நட்சத்திரத்தின் மேல் ஆராய்ச்சி செய்தனர்.) அவர்கள் யாருமே நட்சத்திரத்தைக் கண்டதாக வரலாறு ஏதுவுமில்லை ஏன்? அது அவர்களுக்கு அருளப்படவில்லை. அவர்கள் அப்படிப்பட்ட ஒன்றை எதிர் நோக்கியிருக்கவில்லை. ஆனால் இந்த சாஸ்திரிகளோ யாக்கோபில் ஒரு நட்சத்திரம் உதிக்கும் என்பதை அறிந்து, அவர்கள் அதற்காக எதிர் நோக்கிக் கொண்டிருந்தனர். இயேசு பெத்லகேமில் பிறந்த அந்த நேரம் முதற்கொண்டு அது தோன்றி...

43 இப்பொழுது, நமது கிறிஸ்தவ பாரம்பரியங்களை நானறிவேன். அது நம்முடைய சபைகளைப் போன்றே உள்ளது, அது காரியங்களை தலைகீழாக கொண்டுள்ளது. நீங்கள் இங்கிருந்து வெளியே சென்று பார்த்தால், சாஸ்திரிகள் வந்து ஒரு குழந்தையை பணிந்து கொள்வது போல அலங்காரம் செய்துள்ளதைக் காண்பீர்கள். அப்படிப்பட்ட எந்த ஒரு காரியமும் வேதத்தில் இல்லை. அவர்கள் சமவெளிகளையும், டைக்ரீஸ் நதியையும் கடந்து இரண்டு ஆண்டுகள் கழித்து அந்த இடத்தை அடைந்தனர். அவர்கள் அங்கு வந்து ஒரு சிறு குழந்தையைப் பணிந்து கொள்ளவில்லை. ஏறக்குறைய இரண்டு வயது சிறு பிள்ளையையே பணிந்து கொண்டனர். அந்த

சமயத்தில் ஏரோது ஏன் இரண்டு வயதுக்குட்பட்ட சிறு பிள்ளைகளை கொன்று போட வேண்டும்? அப்படி அவன் செய்தால், மேசியாவும் அகப்பட்டுக்கொள்வார் என்பதானால், பாருங்கள், அவர்கள்... தேவன் தமது வார்த்தையினால் அதை ரூபகாரப்படுத்தினார்.

44 இந்த சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்தபோது... அந்த நட்சத்திரம் அவர்களை உலகத்தின் மதத் தலைநகராக விளங்கிய எருசலேமுக்கு வழி நடத்தினது. அவர்கள் அதன் வாசல்களில் பிரவேசித்த மாத்திரத்தில் அந்த நட்சத்திரம் (அவர்களை வழி நடத்தின இயற்கைக்கு மேம்பட்ட அது), அவர்களுக்கு எதையும் காண்பிக்க மறுத்தது. இந்த அருமையான மனிதர், ஐசுவரியவான்கள், சிறந்த துணிகள் விரிக்கப்பட்டிருந்த ஒட்டகங்களுடன் தெருக்களில் இங்கும் அங்கும் சென்று. அவர்கள் தெருக்களில் இங்கும் அங்கும் சென்று, "யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டோம்" என்றனர். அந்த மகத்தான தலை நகரம், மேய்ப்பர்களின் செய்திக்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும், அதற்கான பதிலைப் பெற்றிருக்கவில்லை, அதைக் குறித்து ஒன்றுமே அறிந்திருக்கவில்லை. எல்லா

ஸ்தாபனங்களுக்கும் தலைமையாய் விளங்கின இடம் அதற்கு விடையளிக்க முடியவில்லை.

45 அது சனகரீப் சங்கத்தை கலக்கினது. அவர்கள் வேத பாரகரை வர வழைத்து படிக்கச் சொன்னார்கள். அவர்கள் மீகா எழுதி வைத்திருந்த, "பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும் (மிகச் சிறியது), என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்படுவார்" என்னும் வரலாற்றைப் படித்துக் காண்பித்தனர். வேத வசனம் வாசிக்கப்பட்டு (அது அவர்களுடைய கண்களுக்கு முன்பாக ரூபகாரப்படுத்தப்பட்ட பின்பும்), வேத வசனம் அவ்வாறு முன்னுரைத்த போதிலும், அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நாளுக்கென வாக்களிக்கப்பட்டுள்ள வேத வாக்கியங்கள் வெளிப்படுத்தப்படும்போது, அவர்கள் அதை இன்று ஏற்றுக்கொள்வார்களோ என்று நான் சந்தேகிக்கிறேன். நான் மறுபடியும் உங்களுக்கு பிரசங்கம் செய்யாமல் போய்விடக்கூடும். ஆனால் இதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். அவர்கள் அப்பொழுதும் அதை விசுவாசிக்கமாட்டார்கள்!

★★★★★